# கருணாநிதி அமைச்சரவையில் நெடுஞ்செழியன்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

ஈழநாடு
EELANADU
National Tamil Daily
தேசிய தினசரி
தபால் பெட்டி எண் 49
போன்: 389
மலர் 11
இதழ்: 175

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்

யாழ்ப்பாணம் ஆடி 22 ஐ: அவ் 21 புதன்கிழமை [6-8-69]

## என். வி. நடராஜன், வேலழகன் புதிய மந்திரிகள்

சென்னை, ஆகஸ்ட் 5

**தமிழ்நாடு முதல்வர் திரு. மு. கருணாநிதியின் அமைச்சரவையில் முன்னாள் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் சேர்ந்துவிட்டார்.**

திருவாளர்கள்: என். வி. நடராஜன், கே. வேலழகன் ஆகியவர்களும் திரு. கருணாநிதியின் மந்திரிசபையில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் மூவரின் பெயர்களையும் நேற்று ராஜ்ய கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங்கிடம் திரு. கருணாநிதி சமர்ப்பித்தார். இந்த மூவரையும் புதிய மந்திரிகளாக கவர்னர் ஏற்றுக் கொண்டார்.

திரு. நடராஜனும், திரு. வேலழகனும் வெள்ளிக்கிழமையன்று மந்திரிகளாக ராஜ்ய கவர்னர் முன்பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்வார்கள். திரு. நெடுஞ்செழியன் 13-ம் திகதி காலையில் பதவி ஏற்றுக்கொள்வார்.

திரு. நெடுஞ்செழியனுக்கு கல்வி சுகாதார அமைச்சும், திரு. நடராஜனுக்கு பின்தங்கிய மக்கள் நலத்துறை அமைச்சும், திரு. வேலழகனுக்கு தொழிலாளர் நல அமைச்சும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. சி. என். அண்ணாதுரையின் அமைச்சரவையில் கல்வி அமைச்சராக கடமையாற்றிய திரு. நெடுஞ்செழியன் அண்ணா மறைந்தபின் முதலமைச்சர் பதவி கிடைக்காததின் காரணமாக திரு. கருணாநிதியின் அமைச்சரவையில்சேர மறுத்துவந்தார். என்றாலும் அவருக்காக அமைச்சரவையின் கதவுகள் திறந்தே கிடப்பதாக திரு. கருணாநிதி அறிவித்திருந்தார். நெடுஞ்செழியன் வகித்த அமைச்சுப் பொறுப்புக்களைத்தாமே மேற்கொண்டுவந்தார்.

இந்நிலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் பதவி குறித்து இருதலைவர்களுக்கு மிடையில் போட்டி ஏற்பட்டது. இருவருமே அப்பதவிக்குப் போட்டியிடுவதாக அறிவித்திருந்தனர். இந்தப் போக்கினால் கட்சியில் பிளவு ஏற்படக்கூடும் என்றுபலரும் அஞ்சினார்கள். என்றாலும் இருதலைவர்களும் கூடிப்பேசி போட்டியைத் தவிர்த்துக்கொண்டார்கள். அதன்பேரில் திரு கருணாநிதி கட்சியின் தலைவராகவும், திரு. நெடுஞ்செழியன் பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கட்சியில் முக்கிய பதவி குறித்து சமரசம் ஏற்பட்டதைத்தொடர்ந்து திரு. நெடுஞ்செழியன் மீண்டும் மந்திரிசபையில் சேர்ந்து கொள்ள இணங்கியிருக்கிறார்.

பத்து அங்கத்தவர்கள் மட்டுமே இருந்துவந்த திரு. கருணாநிதியின் அமைச்சரவையில் இனிமேல் 13 பேர் இருப்பார்கள்.

# பஸ் ஊழியர்வேலைநிறுத்தம் முடிவு
# இன்று பஸ் சேவைசீராக நடக்கும்

### 51 நாள் வேலைநிறுத்தம்

## கைத்தொழில் மந்திரியுடன் 7-ம் தேதி பேச்சுவார்த்தை

யாழ்ப்பாணம், செவ்.

கடந்த 51 தினங்களாக பரந்தன் ரசாயன தொழிற்சாலையில் நடைபெற்றுவரும் வேலை நிறுத்தத்தை ஒரு முடிவிற்கு கொண்டு வருவதற்காக இம்மாதம் 7-ம் திகதி கொழும்பில் முக்கிய பேச்சுவார்த்தை நடைபெறவிருக்கிறது. இப்பேச்சுவார்த்தையில் கைத்தொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனவும் இலங்கை வர்த்தக சங்க பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள். இத்தகவலை, இலங்கை வர்தக சங்க ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

கள் கன்டீனுக்கு செல்ல தடைவிதிக்கப்பட்டிருப்பதாகவும், ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

வேலை செய்யும் ஊழியர்கள் தொழிற்சாலை வான்கள் மூலம், பஸ் நிலையத்திற்கும், புகையிரத நிலையத்திற்கும், அவர்கள் வீடுகளுக்கும், அனுப்பப்பட்டுவருவதாக அறி[illegible]ப்படுகிறது.

அண்மையில் நிரந்தரமாக்கப்பட்ட, தற்காலிக ஊழியர்களில் சிலரும் வேலை நிறுத்தத்தில் இறங்கியிருப்

### திருவாசக மணிமன்றம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் 8-ம் திகதியாழ் மத்தியகல்லூரி மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்படவிருக்கும் திருவாசக மணிமன்றத்தில் திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் சென்னைப்பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய இருபதாம் நூற்றாண்டில் திருக்குறள் - திருவாசகத்தேன் என்னும் பொருள்பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்.

திரு இ சபாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் திரு கே பி ஹரன் விரிவுரையை அறிமுகஞ்செய்து ஆரம்பித்து வைப்பார்.

......

இன்று

## இ. போ. ச. வடபிரதேச முகாமையாளர் அறிவிப்பு

நல்லூர், புதன்

**கடந்த 5 தினங்களாக வடபகுதியில் நடைபெற்றுவந்த இ. போ. ச. வேலைநிறுத்தத்தை இன்று நிறுத்துவதென நேற்று சுமார் 7 மணித்தியாலம் வரை இ. போ. ச. அதிகாரிகளுக்கும்,தொழிற் சங்கத்தலைவர்களுக்கு மிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் முடிவு செய்யப்பட்டது.**

ஊழியர்களின் கோரிக்கையில் ஒன்றான இடமாற்றம் செய்யப்பட்டதொழிற்சங்க பிரமுகர்களின் இடமாற்றம் உடனடியாக ரத்துச் செய்வதென பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொள்ளப்பட்டதாகவும், ஏனைய 19 கோரிக்கைகளும் பரிசிலனை செய்யப் பட்[illegible] [illegible]க்கை [illegible] ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து

தெரிவித்தார்,

இலங்கைப் போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த பிரதம இயக்குனர் திரு ஆர் ஈ பெர்னன்டோ, பர்சனல் மனேஜர் திரு ஏ ஜி பி தாசா, வட பிராந்திய முகாமையாளர் திரு சி ஆர் வேலுப்பிள்ளை ஆகியோரும் தொழிற்சங்கத் தலைவர்களான லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் திரு ஆர் தர்மரெத்தி

பருத்தித்துறை எம் பி திரு துரைரத்தினம் ஆகியோரும் இப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

நேற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி சகலஊழியர்களும் இன்று வேலைக்குத் திரும்புவார்களென இ போ ச அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்:

(இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை இ போ ச தொழிற்சங்கத தலைவர்களு

## 'பிறக்கும் முதல் குழந்தைக்கு— உபசபாநாயகர் பெயரை சூட்டவேண்டும்"

### சுகாதார அமைச்சர் விருப்பம்

யாழ்ப்பாணம்,புதன்

"மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி பிரசவ விடுதியில் முதல் பிறக்கும் ஆண்குழந்தைக்கு உடுப்பிட்டி எம்,பி. யின் பெயரை (சிவசிதம்பரம்) என்பதைச் சூட்ட வேண்டும்.''

சுகாதார அமைச்சர் திரு ஈ.எல்.சேனநாயக்கா தனது இந்த ஆசையை நேற்று முன்தினம் பருத்தித்துறையில் தெரிவித்தார்.

இங்கு நிறுவப்பட்ட பிரசவ வாட்டை [illegible] வைத்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். பிரசவ வார்ட் முகப்பில் பிரதம மந்திரியினதும் சுகாதார அமைச்சரது புகைப்படங்கள் தொங்க விடப்பட்டிருந்தன.

பிரதமர் ஒரு பிரமச்சாரி என்பதாலேயே அவரது படத்தை மட்டும் தொங்க விடுவது பிரசவ வாட்டுக்கு அழகில்லை என்பதால் 6 பிள்ளைகளின் தந்தையான சுகாதார அமைச்சரது படம் அங்கு தொங்கவிடப்பட்டதாக உபசபாநாயகரான திரு. எம். சிவசிதம்பரம் எம்.பி. இதற்கு விளக்கம் கொடுத்தார். (கா. நி)

## வெங்காயத்தின் விலையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவார்த்தையில் கைத்தொழில் மந்திரி திரு. பி. வி. குணவர்த்தனவும் இலங்கை வர்த்தக சங்க பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள். இத்தகவலை, இலங்கை வர்த்தக சங்க ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

வேலை நிறுத்தம் செய்துவரும், இலங்கை வர்த்தக சங்க ஊழியர்களில் 6 பேர் வேலைக்கு திரும்பியிருப்பதாகவும் இன்றும் சிலர் வேலைக்கு திரும்ப விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் நிர்வாக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த மாதம் மூடப்பட்டிருந்த தொழிற்சாலை 'கன்டீன்' இம்மாதம் 1-ம் தேதிமுதல் மீண்டும் திறக்கப்பட்டிருப்பதாகவும் வேலை நிறுத்தம் செய்வோர்க்கும், அனுப்பப்பட்டுவருவதாக அறிவிக்கப்படுகிறது.

அண்மையில் நிரந்தரமாக்கப்பட்ட, தற்காலிக ஊழியர்களில் சிலரும் வேலை நிறுத்தத்தில் இறங்கியிருப்பதாக தெரியவருகிறது.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்கள் தொழிற்சாலை வளவில் கூடாரம் அமைத்துதங்கியிருக்கின்றார்கள் தங்கள் கோரிக்கை நிறைவேறும் வரை, வேலைநிறுத்தத்தை தொடர்ந்து நடத்தப்போவதாக அவர்கள் தெரிவித்தனர்

நிகழ்ச்சியில் திரு கே பி ஹரன் விரிவுரை செய்து அறிமுகஞ்செய்து ஆரம்பித்து வைப்பார்.

......

## இன்று

ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ் தானத்தில், தேவி மகோற்சவ ஆரம்ப மதினமாகிய இன்று பகல் 9 மணிக்கு வசந்த மண்டப பூஜையும், பகல் 10 மணிக்கு துவஜா ரோகணமும், மாலை

மணிமுதல் இரவு 7-30 மணிவரை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமி அவர்களால், ''தேவி மகாத்மியம்'' என்னும் பொருள் பற்றிய கதாப் பிரசங்கமும் இரவு 7-30மணிக்கு இரவு உற்சவமும் நடைபெறும்.

தென பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொள்ளப் பட்டதாகவும், ஏனைய 19 கோரிக்கைகளும் பரிசிலனை செய்யப்பட்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து தொழிற்சங்கத் தலைவர்களுக்கும், இ போ ச அதிகாரிகளுக்குமிடையே ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாகவும்

புதிய அட்டவணைப்படியே வேலைகள் நடைபெறும் என்றும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்மீது எவ்வித பழிவாங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படமாட்டாதென்றும் பேச்சுவார்த்தையில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக வட பிராந்திய முகாமையாளர் திரு கே ஆர் வேலுப்பிள்ளை

சனல் மனேஜர் திரு ... பிடதாசா, வட பிராந்திய முகாமையாளர் திரு சி ஆர் வேலுப்பிள்ளை ஆகியோரும் தொழிற்சங்கத் தலைவர்களான லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் திரு ஆர் தர்மரெத்தினம், திரு விஸ்வநாதன், கம்யூனிஸ் கட்சி திரு கந்தசாமி, தமிழரசுக்கட்சி திரு ஆலாலசுந்தரம், கோப்பாய் எம் பி திரு கதிரவேற்பிள்ளை

யர்களும் இன்று வேலைக்குத் திரும்புவார்களென இ போ ச அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்:

(இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை. இ போ ச தொழிற்சங்கத தலைவர்களுடன் தொடர்பு கொள்வதற்கு நமது நிருபர் எடுத்துக்கொண்ட முயற்சிகளதுவும் பலனளிக்கவில்லை)

தெரிவித்தார்.

இங்கு ... பிரசவ ... வைத்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்

... தாக உபசபாநாயகரான திரு. எம். சிவசிதம்பரம் எம். பி. இதற்கு விளக்கம் கொடுத்தார். (கா. நி)

# "கட்சி, மத பேதங்களை மறந்து தமிழர் ஒன்றுபட வேண்டும்"

## நெல்லியடியில் சுகாதார அமைச்சர்

யாழ்ப்பாணம், புதன்

''இலங்கைத்தீவு இங்கு வாழும் சகல இன. மத மக்களுக்கும் சொந்தமானது. நாமெல்லாம் இலங்கை மாதாவின் குழந்தைகள். எமக்குள்ளிருக்கும் பிளவுகளை ஒழித்து ஒன்றுபடல் வேண்டும். முதலில் தமிழர்கள் தமக்குள்ளிருக்கும் கட்சி, மத பேதங்களை மறந்து இணையவேண்டும், பின்னர் சிங்களவரும், தமிழரும் ஒன்றுபடல்வேண்டும், அப்போதுதான் நாமும் முன்னேறலாம், நாடும் முன்னேறும், பொருளாதார துறையிலும், விவசாயத் துறையிலும் நாம் சுபீட்சமடைய இது ஒன்றேகடைசி வழியாகும்.

சுகாதார அமைச்சர் திரு ஈ எல் சேனநாயக்கா பலரது கரகோஷங்களுக்கு மத்தியில் மிகவும் உணர்ச்சிகரமாக பலத்த தொனியில் இவ்வாறு தெரிவித்தார்,

உடுப்பிட்டி எம் பி யும் உபசபாநாயகருமான திரு மு சிவசிதம்பரத்தால் அளிக்கப்பட்ட இராப்போசன விருந்துக்கு நன்றி தெரிவித்துப்பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இவ்விருந்துபசாரம் அளிக்கப்பட்டது, அமைச்சர் திரு சேனநாயக்கா இங்கு மேலும்தெரிவித்ததாவது:-

பல இன மத மக்களும் பரந்து வாழும் ஒருநாட்டில் அவர்களுக்கிடையே ஒற்றுமை இல்லாவிட்டால் நாடு முன்னேறமுடியாது பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தைச் சேர்த்து வாழவேண்டும் சிறுபான்மை இனம் பெரும்பான்மை இனத்துடன் சேர்ந்து வாழவேண்டும் அப்போதுதான் நாடு ஐக்கியப்பட்டு மக்கள் சுபீட்சமடைய முடியும்

ஒரு இன மக்கள் தங்கள் மொழியில், மதத்தில் நம்பிக்கை வைப்பதைத் தடுக்க மற்ற எந்த இனத்துக்கும் உரிமை இல்லை. நீங்கள் தமிழ் மக்கள். நீங்கள் உங்கள் மொழியில் நம்பிக்கை வைக்க வேண்டும். உங்கள் கலையும், கலாச்சாரமும் தொன்மை வாய்ந்தவை. அவைகளை நீங்கள் வளர்க்கத்தான்வேண்டும். அதைத் தடுக்க பெரும்பான்மை இனமாகவிருந்தாலும் சிங்களவர்களுக்கு உரிமை இல்லை.

உங்கள் வளர்ச்சியிலும், எதிர்கால நலன்களிலும் எனக்கு அதிக அக்கறையுண்டு. எந்தக் கட்சிப் பாகுபாடும் எனக்கில்லை. நீங்கள் எனது கட்சியை அரசியல் ரீதியில் ஆதரிக்கலாம், எதிர்க்கலாம். எனது அமைச்சில் அரசியல் ரீதியில் பாகுபாடு காட்டப்படமாட்டாது என்று நான் உறுதி கூறுகின்றேன்.

இச்சமயத்தில் அமைச்சர் அருகில் இருந்த தமிழரசு எம். பி. திரு. கே. துரைரத்தினமும், தமிழ்க்காங்கிரஸ் எம். பி. திரு. எம் சிவசிதம்பரமும் புன்சிரிப்புடனும் கைதட்டி மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

அமைச்சர் மேலும் பேசுகையில், தமிழ்மக்கள் கட்சிபேதங்களை மறந்து ஒன்றுபடவேண்டும். பின்னர் தமிழரும் சிங்களவரும் ஒன்றுபடவேண்டும் என்றும் மீண்டும் வற்புறுத்தினார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை, டாக்டர் ரி. அருளம்பலம் ஆகியோரும் பேசினார்கள். சுகாதார இலாகா சிரேஷ்ட அதிகாரிகள் பலரும்சமுகம் கொடுத்திருந்தனர்.

(கா. நி.)

# மேயர் வேண்டுகோளை அமைச்சர் நிராகரித்தார்

## மின்சாரநிலைய காணியில் விரைவில் சிகிச்சை நிலையம்

யாழ்ப்பாணம், புதன்

மின்சார நிலையத்துக்கும் அரசினர் ஆஸ்பத்திரிக்குமிடையிலுள்ள பாதையை மீண்டும் திறக்குமாறு யாழ்ப்பாண மேயர் விடுத்த வேண்டுகோளை சுகாதார அமைச்சர் நேற்று நிராகரித்தார்.

நோயாளிகளினதும், பொது மக்களினதும் நலனை முன்னிட்டே மின்சார நிலையக் காணி வெளி நோயாளர் சிகிச்சை நிலையக் கட்டடத்துக்காக கையேற்கப்பட்டதாகவும் இதன் இடையிலுள்ள பாதையை மீண்டும் திறக்குமாறு கோருவது நியாயமற்றது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

யாழ் மாநகர சபை உறுப்பினரான திருமதி

(4-ம் பக்கம் பார்க்க

# தொடர்ந்து பொலிஸ் பாதுகாப்பு

வேலைநிறுத்தம் இன்றுடன் முடிவடைந்தாலும் கூட பொலிஸ் பாதுகாப்பு தொடர்ந்து இருக்கும், கோண்டாவில் இ போ ச டிப்போ, பஸ் நிலையம் போன்ற இடங்களில் ஆயுதந்தாங்கிய பொலிசார் கடமையாற்றுவார்களென பொலிஸ் அதிபர் திரு ஆர் சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

# பிரதேசமுகாமையாளர் வீட்டுக்கு குண்டுவீச்சு; இருவருக்கு காயம்

நல்லூர், புதன்

வடபிராந்திய முகாமையாளர் திரு.சி.ஆர். வேலுப்பிள்ளையின்வீட்டிற்கு நேற்று முன்தினமிரவு சுமார் 10-30 மணியளவில் கைக்குண்டு வீசப்பட்டது. ஆயுதம் தரித்த பொலிசார் வீட்டை காவல்புரிந்து கொண்டிருந்தபோதே இச்சம்பவம் நடந்தது. இக் கைக்குண்டு வீச்சில் தெருவினால் சென்ற இருவர் காயமடைந்தனர் என்று பொலிசார் தெரிவித்தனர். முகாமையாளர் வீட்டின் முற்பகுதி சேதமடைந்துள்ளது.

நேற்று முன்தினம் மூன்று கைக்குண்டு வீச்சுச் சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாகவும் பொலிசார் தெரிவித்தனர். நாச்சிமார் கோவிலடியில் நடந்த கைக்குண்டு வீச்சில் பஸ் ஒன்று சேதமடைந்ததாகவும், ஓட்டுமடத்தில் நடந்த கைக்குண்டு வீச்சுச் சம்பவத்தில் சைக்கிளில் சென்ற ஒருவர் காயமடைந்ததாகவும் பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

மட்டுவில் தெல்லிப்பளை, ஓட்டுமடம் மற்றும் சில இடங்களில் பல வீடுகளில் பொலிசார் கைக்குண்டுகள் இருப்பதாகச் சந்தேகித்துத் தேடுதல் நடத்தினர்

நேற்றுக்காலை தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் மாணிககம் தலைமையில் பொலிஸ் கோஷ்டியொன்று கைக்குண்டுகளைத்தேடி யாழ்ப்பாணப் பகுதியில் சோதனை நடத்தினர்.

கைக்குண்டு வீச்சுச் சம்பவங்கள் சம்பந்தமாகப் பஸ் ஊழியர் நால்வரை சந்தேகத்தின் பேரில் பொலிசார் தேடிவருவதாக பொலிசார் தெரிவித்தனர்.

கோண்டாவில் பஸ் டிப்போவில் காவல்புரிந்து வரும் பொலிசார் நேற்று முன்தினமிரவு படம்பார்த்து விட்டுச்சென்ற மாணவர்களைத் தாக்கியதாக கோப்பாய் எம் பி திரு எஸ் கதிரவேலுப்பிள்ளை வடபகுதி பொலிஸ் அதிபருக்கு நேற்றுபுகார் செய்துள்ளார்.

# 'கண் அமுக்கம் எப்படி ஏற்படுகிறது?'

யாழ்ப்பாணம், புதன்

கண்ணைக் குருடாக்கும் நோய்களில் மிகக் கடுமையானதாகக் கருதப்படும் கண் அமுக்கம் பற்றியும் அது எவ்வாறு உண்டாகிறது. அதனால் கண்ணுக்கு என்னென்ன தீமைகள் விளைகின்றன அது ஏற்படுவதற்கான அறிகுறிகள் என்ன என்பனவற்றையெல்லாம் குறிப்பிட்டுக் கண் அமுக்கத்தைத் தடைசெய்யும் சபையினர் ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டுள்ளனர்.

அத்துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருப்பதாவது: கண் அமுக்கம் கண்களுக்கு ஆபத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு வியாதி. கண்ணினுள்ளே அமுக்கம் கூடினால் கண் நரம்புகள் மெல்ல மெல்ல இறுக்கப்பட்டு ஒவ்வொரு நாராக இறந்து போகும். இறந்த நரம்புகளை உயிர்ப்பிக்க எந்த விஞ்ஞான முறையாலும் இயலாதாகையால் கண்கள் குருடாகிவிடும். கண் அமுக்கத்தை அடக்கலாமேயன்றி மாற்றமுடியாது. எனவே அடிக்கடி கண்ணாடி மாற்றுதல், வாசித்தவுடன் கண்ணில் வலியேற்படுதல், இரவில் போய்வருதல் கஷ்டமாக இருத்தல், சிவந்து நோவுண்டாதல் ஆகிய கண் அமுக்கத்துக்கான அறிகுறிகளைக் கவனித்து இவைகளில் ஒன்று ஏற்படினும் வைத்தியரிடம் காண்பிக்க வேண்டும். இந்நோய் அனேகமாக 40 வயதுக்கு மேற்பட்டவர்களைத் தாக்கும்.

கண்ணை ஒரு ரப்பர் பை போலக் கருதவேண்டும். இப்பைக்குள் தண்ணீரை உள்ளே கொண்டு செல்லும் ஒரு குழாயும், வெளியேற்றும் நீரைக் கொண்டுசெல்லும் ஒருகுழாயையும் காணலாம். வெளியேறும் நீரும், உள்ளேவரும் நீரும் ஒரேயளவாகவிருக்க வேண்டும், வெளியேறும் குழாய் சிறுத்தால் நீர் பையினுள் அடங்கி அமுக்கம் கூடும். இவ்வாறுதான் கண் அமுக்கம் உண்டாகிறது.

# வெங்காயத்தின் விலையை அதிகரிக்கும்படி கோருவர்

## அமைச்சரை சந்திக்க முடிவு

யாழ்ப்பாணம், புதன்

வெங்காயத்தின் உத்தரவாத விலையைக் கூட்டித்தர வேண்டுமென உணவு அமைச்சரைக் கோருவதென்ற தீர்மானம் நேற்றுநடைபெற்ற வடபகுதி உணவு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசத்தின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதிகாரசபை அங்கத்தவர் திரு தி. பரமானந்தராசவினால் கொண்டுவரப்பட்ட இப்பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது வடபகுதியில் உற்பத்தியாக்கப்படும் வெங்காயம் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்கின்றபோதிலும் உற்பத்தியாளருக்குக்கொடுக்கப்படும் விலை மிகக்குறைவாகவிருப்பதாக இங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

உணவு அமைச்சரைசங்கப் பிரதிநிதிகள் சந்தித்து இது பற்றி பேச்சுவார்த்தைநடாத்துவர். சென்றவருடம் போலல்லாது இவ்வருடம் நல்லரக விதை உருளைக்கிழங்குகளை தருவிக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் இவர்கள் அமைச்சரிடம் சமர்ப்பிப்பர்.

சமாஷத்தில் செயலாளராகக் கடமையாற்றும் திரு. ரி, கணேஷனுக்கு உபகாரச் சம்பளம் வழங்கி ஜப்பானுக்கு அனுப்புவதென்ற தீர்மானமும் எடுக்கப்பட்டது.

# 'பொதுமக்கள் பாதித்துள்ளனர்'

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதியில் வேலைநிறுத்தம் செய்துவரும் இ. போ. ச. ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்து, பொதுமக்கள் அனுபவித்து வரும் கஷ்டங்களை உடனடியாக தீர்க்க ஆவன செய்யுமாறு கோரும் தந்தியொன்றை யாழ். நகர முதல்வர் திரு. நாகராசாவும், துணைமுதல்வர் திரு. துரைராசசிங்கமும் இ. போ. ச. பிரதம இயக்குனரிடம் தந்திமூலம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

பஸ்சேவை பாதித்துள்ளதால் பொதுமக்களும், பாடசாலை மாணவர்களும் வலுவாகப் பாதித்துள்ளனர் என்றும் உடனடி சமரச நடவடிக்கை தேவை என்றும் இவர்கள் தந்தியில் குறிப்பிட்டுள்ளனர். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்களையும் சந்தித்து இவர்கள் பேச்சுவார்த்தை நடாத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மின்சாரத்தில் இயங்கும் ''சன்பீம்'' சேவிங் மிஷின் விற்பனைக்குண்டு. றேடியோ எலெக்றிக்ஸ் 80, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 1294

புடவைக்கடைக்குரிய தளபாடங்கள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம். சிவ சக்தி ரெக்ஸ்ரையில்ஸ், மெயின் வீதி, சுன்னுகம். 1295

மின்சார மோட்டரில் இயங்கும் ஒரு சோடா யந்திரம் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: வ. நடராசா, றெயில்வே ஸ்ரேஷனடி, சுன்னுகம். 1296

### நன்றிநவிலல்

காலஞ்சென்ற இராமலிங்கம் அவர்களின் இறுதிச் சடங்கிற்கு வருகை தந்தவர்களுக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் பல வழிகளில் ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் அன்னாரின் குடும்பம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது. தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் நன்றி கூற இயலாமைக்கு வருந்துகின்றோம். 1065

### விளையாட்டுப் போட்டி

சுழிபுரம், செவ்வாய் வல்வெட்டி வளர்மதிவிளையாட்டுக் கழகத்தினரின் 5-வது விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இம் மாதம் 20-திகதி நடைபெறும்.

### உற்சவங்கள்

பண்டத்தரிப்பு, செவ். சில்லாலை கதிரைமாதா ஆலய உற்சவத்திற்கான ஆயத்த நவநாட்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. 15-ம் திகதி திருநாட் பூசையுடனும் சொரூபசுற்றுப் பிரகாரத்துடனும் திருநாள் முடிவடையும்.

மாரீசன்கூடல் புனித கயித்தார் திருநாளுக்கான நவநாட்களும் நடைபெற்று வருகின்றன. 7-ம் திகதி திருநாட்பூசையுடனும் சுற்றுப் பிரகாரத்துடனும் திருநாள் முடிவுறும்.


வேலணை கிராமச்சபை

## கேள்வி அறிவித்தல்

### வேலை விபரம்

வாசிகசாலை கட்டிடம்

வேலணை கிராமச்சபை தலைவரால் மேற்குறிப்பிட்ட வேலை செய்வதற்கு கேள்விப்பத்திரங்கள் 1969-ம் ஆண்டு ஆவணி மாதம் 21-ந் திகதி காலை 10-30 மணி வரையும் சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 19-8-69-ம் திகதி நண்பகல் 12 மணி வரையும் கேள்விப் பணம் ரூபா 50/- பத்திரப் பணம் ரூபா 5/- கட்டியதன் பேரில் உத்தியோகபூர்வமான பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்கட்கு வழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் கிராமச் சபைக் காரியாலயத்திலும் வடபகுதி உதவி உள்ளூராட்சி அதிபரின் காரியாலயத்திலும் அறிந்து கொள்ளலாம்

க. சதாசிவம்
தலைவர்,
1689 கிராமசபை
வேலணை.


## 'இளந்தென்றல் கலாலயம்'

யாழ்ப்பாணம், புதன்

குருநகரில் 'இளந்தென்றல் கலாலயம்' ஒன்று அமைக்கப்பட்டது. குருநகர் 'நண்பர் இல்லத்தில்' இக்கலாலயம் திரு. பொன் பொன்ராசா தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். போஷகர் பொன். பொன்ராசா, தலைவர்: எஸ். யோகராசா, உபதலைவர்: ஏ. பங்கிராசா, செயலாளர்: ஏ. அலோசியஸ், உபசெயலாளர்: எஸ். எஸ்பீரியல், பொருளாளர்: ஏ. சூரி, உபபொருளாளர்: பி. யேசுதாசன்.

ஏ. பிலிப், ஏ. ஏசு, ஏ. குலம், ஏ. அமலதாஸ், ஏ. கிறிஸ்தோப்பர், ஜே. செபநாயகம், பி. யேசுதாசன் ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 6—8—69

(காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 வயலின் இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 49 மீ**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 61 மீ**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்விஒலிபரப்பு, 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 வளரும்பயிர், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 இசைப் பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 பாட்டு, 7-35 பேச்சு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 செய்திச்சுருள், 9-45 நாதஸ்வரம், 10-30 செய்திச்சுருக்கம்.

## மூன்றுண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், புதன்

இன்று காலை நல்லூரில் நல்லை ஆதீனத்திற்குச் சொந்தமான, புதுமடத்தில் தம்பிரான் ஸ்வாமிகள், துறவு பூண்ட மூன்றுவது ஆண்டு நிறைவு விழா ஆதீன அடியார்களால் கொண்டாடப்படுகின்றது. காலை 8 மணிக்கு ஆதீன மூர்த்திகட்கு அபிஷேக ஆராதனையும் 10 மணிக்கு ஆதீன குருமூர்த்திகட்கு அபிஷேக ஆராதனையும், 12 மணிக்கு மஹேஸ்வர பூஜையும், இரவு 7.30 மணிக்கு நல்லைக்கந்தன் திருப்புகழ் மண்டபத்தில் தம்பிரான் ஸ்வாமிகளது கிருத்திகைப் பிரசங்கமும் நடைபெறவிருக்கின்றன

## பரதநாட்டியம்

யாழ்ப்பாணம், புதன்

செல்வி கௌரி முத்துக்குமாரசாமியின் பரதநாட்டியம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இம் மாதம் 11-ம் திகதி நடைபெறவிருக்கிறது. கலா


COMMISSION SALE

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை டிஸ்திரிக் கோட்டில் இல 10175

இமையாணன் 1. ஆறுமுகம் ஞானப்பிரகாசம்
2. குகப்பிரகாசம் கைம்பெண் நர்கம்மா
—வழக்காளிகள்.

எதிராக

உடுப்பிட்டி 1. அம்பலம் கதிரவேலு
2. தம்பு இரத்தினம்
3. பெண் சரஸ்வதி
4. கணபதிப்பிள்ளை சீவரெத்தினம்
5. பெண் இராசம்மா —எதிரிகள்

மேலே சொல்லப்பட்ட இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப் படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படுமாதனங்கள் 1969-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 2-ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் குறித்த காணிகளிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று உடுப்பிட்டியிறை செம்பாடு நிலப்பரப்பு 3 1/2 இவைகளில் ஷை நிலப்பரப்பு 1 3/4 தட்டாம்புளியடி நிலப்பரப்பு 2 1/2 இவைகளில் 1-ம் பிரிவு முழுவதும் 2 ம் பிரிவில் அரைவாசியும் 3-ம் பிரிவில் 1/4 பங்கும் ஒரே காணியாகவிருக்கின்றது இதன் விசாலம் நிலப்பரப்பு 5 இதற்கு ஆட்சியிலிருக்கும் நிலப்பரப்பு 6 குளி 6 இதில் ரேட்டுக்குத்தெற்கே நிலப்பரப்பு 3 குளி 14 7/32 இதுவும் ஷையிறை செம்பாடு நிலப்பரப்பு 3-ம் தற்காலம் ஒரே துண்டாயிருக்கிறது. இதன் விசாலம் நிலப்பரப்பு 6 குளி 14 7/32. இதற்கு உலாந்தா மேஸ்தர் வே சீவரெத்தினத்தால் 31-12-63-ல் 2330-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின் படி நிலப்பரப்பு 6 குளி 17 8/32 இதில்,

1. குறித்த படத்தில் 4-ம் நம்பர் துண்டுக்குக் குளி 15 14/32 எல்லை கிழக்கு கதிர்காமர் சிதம்பரப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் மறுபேடுக்குமுடைய வாதனம் வடக்கு குறித்த படத்தில் 5-ம், 7-ம் நம்பர்த் துண்டுகள் மேற்கு குறித்த படத்தில் 3-ம் நம்பர்த் துண்டு தெற்கு வல்லிபுரம் இராமலிங்கத்திற்கும் மறுபேடுக்கும் உடையவாதனம் இதடங்கலும் 7 ம், 8-ம், 9 ம் நம்பர்த் துண்டுகளிலும் 9-ம் துண்டுக்குள்ளிருக்கும் கிணற்றிலும் இதற்குரிய பங்கும்.

2. குறித்த படத்தில் 2-ம் நம்பர்த்துண்டுக்கு குளி 15 14/32 எல்லை கிழக்கு குறித்த படத்தில் 7-ம் நம்பர்த் துண்டு வடக்கு குறித்த படத்தில் 1-ம், 8-ம், நம்பர்த் துண்டுகள் மேற்கு செல்லையா கணபதிப்பிள்ளைக்குடைய வாதனமும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலைக்குரிய ஆதனமும் தெற்கு குறித்த படத்தில் 3-ம் நம்பர் துண்டு இது முழுவதும் 7-ம், 8-ம், 9-ம் நம்பர்த்துண்டுகளிலும் 9-ம் நம்பர்த் துண்டுக்குள்ளிருக்கும் கிணற்றிலும் இதற்குரிய பங்கும்.

3. குறித்த படத்தில் 3-ம் நம்பர்த் துண்டுக்குக் குளி 12 14/32 எல்லை கிழக்கு குறித்த படத்தில் 4-ம், 7-ம் நம்பர்த் துண்டுகள் வடக்கு குறித்த படத்தில் 2-ம் நம்பர்த்துண்டு மேற்கு உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் பாடசாலைக்குரிய வாதனம் தெற்கு வல்லிபுரம் இராமலிங்கத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம் இது முழுவதும் 7-ம், 8-ம், 9 ம் நம்பர்த்துண்டுகளிலும் 9-ம் நம்பர்த்துண்டுக்குள்ளிருக்குங் கிணற்றிலும் இதற்குரிய பங்கும்.

| | | |
|---|---|---|
| துரட்சித்தொகை | 4941 | 87 |
| ரூபா 4035—51-க்கு 23-8-68 தொடக்கம் 15-11-68 வரை 9 வீத வட்டி ரூபா | 83 | 00 |
| ரூபா 5024—81-க்கு, 15-11-68 தொடக்கம் 15-5-69 வரை 5 வீத வட்டி ரூபா | 126 | 00 |
| மொத்தம் | 5150 | 87 |

வல்வெட்டித்துறை, V. M. Kandasamy,
29-7-69. Commissioner Sale & Valuer.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட பாடசாலை விளையாட்டு போட்டி முடிவுகள்

## சென்ஜோன்ஸுக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண பாடசாலை விளையாட்டுச் சங்கம் நடாத்திய யாழ் மாவட்டக் கல்லூரிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் யாழ்ப்பாணம்பரி யோவான் கல்லூரி (சென்ஜோன்ஸ்) கூடிய புள்ளிகளைப் பெற்று முதலிடத்தை தட்டிக் கொண்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரி இரண்டாவது இடத்தையும் யாழ் மத்திய கல்லூரி மூன்றுவது இடத்தையும் அடைந்தன.

'பாங்கோக்' பாடசாலைகளின் விளையாட்டு அதிபர் திரு ரா ஜந்திரா இவ்விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். வெற்றி பெற்ற வீரர்களுக்கு திருமதி இராஜேந்திரா பரிசில்களை வழங்கினர்.

யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டியின் முழு விபரங்களும்பின் வருமாறு:

**16 வயதுக்குகீழ்**

உயரம் பாய்தல்: சாந்திகுமார் (யா ம க) கமலேசன் (யா ம க) ராஜசேகரம் பரி யோ க) (உயரம் 5அடி 2அங் – புதியசாதனை)

400 மீட்டர் ஓட்டம்: ஜெயதேவா (பரி யோ க) ஸ்ரீகாந்தா (யா ம க) தனஞ்சயன் (கொ இ க).

நீளம்பாய்தல்: கெங்காதரன் (யா இ க) ஈஸ்வரகாந்தன் (பரி யோ க) சிவகுமார் (யா ம க).

200மீட்டர் ஓடடம்: சண்முகராஜா (யா இ க) ஈஸ்வரகாந்தன் (பரி யோ க கெங்காதரன் (யா இ க)

ஈட்டி எறிதல்: சிவசுந்தரம் (பரி யோ க) தனஞ்சயன் (கொ இ க) அனந்தா (கொ இ க)

100 மீட்டர் ஓட்டம்: ஈஸ்வரகாந்தன் (பரி யோ க) சண்முகராஜா (யா இ க) கெங்காதரன் (யா இ க)

பரிதிவட்டம் வீசுதல்: சிவசுந்தரன் (பரி யோ க) கணேஸ்குமார் (யா இ க) தனஞ்சயன் (கொ இ க)

குண்டு எறிதல்: சிவசுந்தரன் (பரி யோ க) சாந்திகுமார் (யா ம க) சண்முகராஜா (யா இ க)

4X100 அஞ்சல் ஓட்டம்: யாழ்-மத்தியகல்லூரி, யாழ் ... (பரி யோ க யோகராசா (யா ம க) (நீளம் 36அடி 10அங்குலம் புதிய சாதனை)

400 மீட்டர் ஓட்டம்: பாஸ்கரன் (யா இ க) ரஞ்சன் (பரி யோ க அழகரத்தினம் (பரியோ க)

பரிதிவட்டம் வீசுதல்: சோதிலிங்கம் (பரி யோ க) சிறீபாலரட்ணம் (யா ம க) ராஜகுலசிங்கம் (கொ இ க)

200 மீட்டர் .ஓட்டம்: ஜெராட் (அர்ச் அ க) றூபேட் (அர்ச் அ க) வசந்தன் (யா இ க)

100மீட்டர் ஓட்டம்: பிரேமச்சந்திரன் (யா ம க) ஜெராட் (அர்ச் அ க) றூபேட் (அர்ச் அ க)

உயரம்பாய்தல்: விமலகுரு (பு ம வி) ரஞ்சன் (பரி யோ க) புவனேசன் (கொ இ க)

ஈட்டி எறிதல்: பிரேமச்சந்திரன் (யா ம க) ராஜகுலசிங்கம் (கொ இ க) கனகேஸ்வரன் (யா இ க (நீளம் 141அடி 01 அங்குலம் புதிய சாதனை)

800 மீட்டர் ஓட்டம்: அழகமுத்து (பரியோ க) ஜெயானந்தகுமார் அர்ச் அ க) ஜெயகுமார் (யா ம க)

4 x 100 அஞ்சல் ஓட்டம்: யாழ். மத்திய கல்லூரி, யாழ் இந்துக்கல்லூரி, அர்ச் அந்தோனியார் கல்லூரி (நேரம் 50. 2. புதியசாதனை

4X400 அஞ்சல் ஓட்டம்: யாழ் மத்தியகல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி பரியோவான் கல்லூரி.

**19 வயதுக்குக்கீழ்**

200 மீட்டர் தடை தாண்டிப் பாய்தல்:- கருணுகரன் கொ.இ.க.) சாந்தசொரூபன் (கொ.இ.க.) சிறிரங்கன் (யா.ம.க.)

பரிதிவட்டம் வீசுதல்: ஜெயபிரகாஸ் (பரி.யோ.க) சாந்தசொரூபன் (கொ. இ. க )நகுலேந்திரன் (யா.இ.க) (நீளம் 109' 7'' புதிய சாதனை).

400 மீட்டர் ஒட்டம்: கருணுகரன் (பரி.யோ.க ) சாந்தசொரூபன் கொ. இ. க.) கருணுகரன் (கொ.இ.க) (நேரம் 55.2. புதியசாதனை)

200 மீட்டர் ஓட்டம்: கருணுகரன் (பரி.யோ.க) தனபாலசிங்கம் (பு.ம.வி.) நகுலேந்திரன் (யா.இ.க.)

110யார் தடை தாண்டிப் பாய்தல்:- ஆனந்தலிங்கம் (பரி.யோ.க.) லோகேந்திரன் (பரி.யோ.க ) சிவனேஸ்வரன் (கொ.இ.க.) (நேரம்-18-1 புதிய சாதனை)

1500 மீட்டர் ஓட்டம்:- பிரான்சிஸ் (அர்ச்.அ க.) கருணுநிதி (ந.க.)

(3-ம் பக்கம் பார்க்க)

கச்சாய்

## அரசினர் வித்தியாலய பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், புதன்

கச்சாய் அரசினர் வித்தியாலயத்தில் நேற்று நடந்த பரிசளிப்பு விழாவில் பரிசு பெற்றவர்களின் விபரம்வருமாறு:

பேச்சுப்போட்டி; ச கமலாம்பிகை (கீழப்பிரிவு) க. திலகவதி (மத்திய பிரிவு) சு அருட்பிரகாசம் (மேற் பிரிவு)

கட்டுரைப்போட்டி- சு. குமாரசாமி (கீழ்ப்பிரிவு) பே. கமலாசனி (மத்திய பிரிவு) த. சரஸ்வதி (மேற் பிரிவு.)

இசைப்போட்டி- வி. கண்மணி (கீழ்ப்பிரிவு) கு: தவமலர் (மத்தியபிரிவு) வே. சிவசோதி (மேற்பிரிவு)

பிரதான பாடங்களுக்கான பரிசுபெறுவோர் ஜி. (சைவசமயம்) கு. நடராசா (தமிழ்மொழி) சு. சோதிப்பிள்ளை (எண்கணிதம்).

பரிசில்கள் வழங்க நிதி உதவி புரிந்தவர்களின் விபரம்: திருவாளர்கள் சோ. சு. சரவணமுத்து, வே. தம்பிராசா, பொ. இரத்தினம், வே. இராசரத்தினம், நீ. சின்னையா, வே. சிவசுப்பிரமணியம், க; நவஜீவன், சி. செல்வத்துரை. இ. வீரகத்திப்பிள்ளை, வே. இராமநாதன். பொ நடராசா வே குணரத்தினம், செ குலசேகரம், க. ஆறுமுகம் த தங்கமயில், வே. திரவியநாயகம், த பூதத்தம்பி, க பொன்னையா. பூ தம்பையா, த சின்னத்துரை அ தம்பியையா, வ கனகரத்தினம், க செந்தில்வேல்


## தேவை

கீழ்க்குறிப்பிட்ட பொருட்களைத் தரக்கூடியவர்

வருகின்றன. 7-ம் திகதி திரு நாட்பூசையுடனும் சுற்றுப் பிரகாரத்துடனும் திருநாள் முடிவுறும்.

உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.


## தேவை

கீழ்க்குறிப்பிட்ட பொருட்களைத் தரக்கூடியவர்கள் எங்களுக்கு 11-8-69க்கு முன் விலைகளைக் குறிப்பிட்டு அறிவிக்கவும்.

கண்டாவளை மண் 480 கன அடி (25 லொறி)
மண்கும்பான் மண் 140 கன அடி (13 லொறி)
1'' இரேசர் கல் 215 கன அடி (20 லொறி)
2'' இரேசர் கல் 107 கன அடி (10 லொறி)

சி. நோர். அபிவிருத்தி நிலையம்,
துறைமுகம்,
காரைநகர்.

1435




ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 4 காட்சிகள்]

சிவாஜி — ஜெயலலிதா சௌகார் ஜானகி நடித்த

எங்க ஊர் ராஜா



கெப்பிட்டல் (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | விஜயா (மட்டுநகர்
வெலிங்டன் யாழ்ப்பாணம்) | ராஜ் (நீர்கொழும்பு) | ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
2-30, 6-30, 9-30



எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா

மனோகர், அசோகன், விஜயகுமாரி, சோ, மனோரமா, கண்ணன் நடித்த

கணவன்

இசை: எம். எஸ் விஸ்வநாதன்
டைரக்ஷன் ப. நீலகண்டன்


## பரதநாட்டியம்

யாழ்ப்பாணம், புதன்

செல்வி கௌரி முத்துக் குமாரசாமியின் பரதநாட்டியம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இம்மாதம் 11-ம் திகதி நடைபெறவிருக்கிறது. கலாக்ஷேத்திரா முதற்பிரிவில் இவர் டிப்ளோமா பட்டம் பெற்றவரென்பது குறிப்பிடத்தக்கது.

## கோவை சென்றார்

பண்டத்தரிப்பு, செவ்.

இளவாலை கன்னியர் மடத்தைச் சேர்ந்த சஸ். சிஸ். மரியரேஸ் திருமறைக் கல்லூரியில் இருவருடப்பயிற்சி பெறுவதற்காக இந்தியாவில் உள்ள கோவைக்குச் சென்றுள்ளார்.


வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். - சாவித்திரி நடித்த
வேட்டைக்காரன்
புதிய கொப்பி

வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த
காவல்காரன்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
பிரி போயா, போயா 4 காட்சிகள்
சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி நடித்த
குழந்தைக்காக

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெமினி - சரோஜாதேவி நடித்த
தாமரை நெஞ்சம்

REGAL JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Poya, Pre Poya 4 Shows
Clint Eastwood
in
FOR A
FEW DOLLARS MORE

MANOHARA
JAFFNA
Daily 4,45, 7 & 9-45 p.m.
Jack Lemmon,
Walter Motthau
in
THE ODD COUPLE
(color)



| | | |
|---|---|---|
| 15-11-68 வரை 9 வீத வட்டி ரூபா | 83 | 00 |
| ரூபா 5024—81-க்கு, 15-11-68 தொடக்கம் | | |
| 15-5-69 வரை 5 வீத வட்டி ரூபா | 126 | 00 |
| மொத்தம் | 5150 | 87 |

வல்வெட்டித்துறை
29-7-69.

V. M. Kandasamy,
Commissioner Sale & Valuer.

1690


## TRAFFIC NOTICE

The following roads will be closed for all vehicular traffic between 18-8-69 and 14-9-69 (both days inclusive) in connection with the above festival.

1. That section of Point-Pedro road, between Arasady junction and the 2nd Mile Post.
2. That section of Temple Road between Pandara-Kulam Lane and Somasunderam Lane.
3. That section of Chetty Street from Point-Pedro Road to Chetty Lane.

### NOTE

Bona-fide residents of the area and all officials visiting the area on duty will be issued with Special Traffic Permits at the Temporary Police Station near Kandasamy Kovil at Nallur from the evening of 17-8-1969.

### DEVIATION OF TRAFFIC

Drivers of all vehicular traffic are requested to use the following deviations:-

1. Navalar Road-Nallur Cross Road deviation when proceeding from the direction of Jaffna towards Kopay or in the opposite direction.
2. Wyman Road-Navalar Road-Nallur Cross Road deviation when proceeding along Arasady Road towards Kopay or in the opposite direction. Also the following "One Way" traffic will operate-Wyman Road from North to South, Arasady Road West to East (from Palaly Road to Point-Pedro Road.)

### PARKING OF VEHICLES

For the convenience of the pilgrims town vehicles parks will be arranged at the following places and all drivers of vehicles are requested to use them for parking their vehicles.

1. At the Amman Temple grounds, for traffic approaching Kandasamy Temple via Arasady Road.
2. At Kailasapillaiyar Temple grounds for traffic approaching from the south.
3. At Muthuraisanthai Market grounds for traffic approaching from the direction of Kopay.
4. At Tinnevely Sivan Kovil grounds for traffic approaching from Palaly Road/Tinnevely.

S. I. AZEEZ
Asst. Supdt. of Police,
Jaffna.

Police Office,
Jaffna.
31-7-1969

1687

## வெள்ளி விழா

பண்டத்தரிப்பு, செவ்.

யாழ். மேற்றிராசனத்தின் மன்னார் பிரிவில் தொண்டு புரிந்துவரும் வண. எஸ். ஏ. மைக்கல்சாமி இம்மாதம் 10-ம் திகதி தமது குருத்துவ சேவையின் 25 வருட வெள்ளிவிழாவைக் கொண்டாடவிருக்கிறார்.

பண்டத்தரிப்பு, செவ்.

இளவாலையைச் சேர்ந்த சுமார் 70 வயதுடைய சவரி அலெக்ஸ் என்பவர் கடந்த மூன்று வாரமாகக் காணமல் போய்விட்டார். தேடுதல் முயற்சி பெதுவும் பலனளிக்கவில்லையென்றும், இவர் சிறிது புத்தி சுவாதீனமற்றவரென்றும் தெரிகிறது.

தனஞ்சயன் (கொ இ க)

குண்டு எறிதல்: சிவசுந்தரன் (பரியோ க) சாந்திகுமார் (யா ம க) சண்முகராஜா (யா இ க)

4X100 அஞ்சல் ஓட்டம்: யாழ்-மத்தியகல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி, பரியோவான் கல்லூரி. (நேரம் 51-4 புதிய சாதனை)

### 17வயதுக்கு கீழ்

நீளம்பாய்தல்: புவனேசன் (கொ இ க) றாபேற் அர்ச் அ க) விஜயகுமார் யா ம க)

குண்டு எறிதல்: ராஜகுலசிங்கம் (கொ இ க) ஸ்ரீபன்

பிரிவு) த. சரஸ்வதி (மேற்பிரிவு.)

இசைப்போட்டி- வி. கண்மணி (கீழ்ப்பிரிவு) கு: தவமலர் (மத்தியபிரிவு) வே. சிவசோதி (மேற்பிரிவு)

பிரதான பாடங்களுக்கான பரிசுபெறுவோர் ஜி. சி. ஈ. (சாதாரணம் வே. சிவசோதி (சைவசமயம்) சி. சிதம்பரம் (தமிழ்மொழி) த. சரஸ்வதி (எண்கணிதம்) 9-ம் வகுப்பு க. கார்த்திகேசு (சைவசமயம்) ப பொன்னுத்துரை (தமிழ்மொழி எண்கணிதம்) 8-ம் வகுப்பு வே. சகுந்தலாதேவி (சைவ சமயம்) இ. தவரத்தினம்

குணரத்தினம், செ குலசேகரம், க. ஆறுமுகம் த தங்கமயில், வே. திரவியநாயகம், த பூதத்தம்பி, க பொன்னையா. பூ தம்பையா, த சின்னத்துரை அ தம்பியையா, வ கனகரத்தினம், க செந்தில்வேல் மு புண்ணியர், நா குமாரசாமி, சி கந்தையா, சி வல்லிபுரம், அ நமசிவாயம், க சின்னையா, எஸ் கந்தையா சி சரவணமுத்து, நா சிவசுப்பிரமணியம்' வி வேலாயுதம், ஆ கனகு, ஆ வேலாயுதபிள்ளை, செ தம்பிராசா மு சி பதஞ்சலி, க இராசையா, க கனகசபை.





BAYER

பாதுகாப்புடன் உங்கள் இலாபத்தைப் பெருக்குங்கள்

உயர்தர கனிச்சத்து உப்புக்கலவை பிகுட்றின் உணவு மூலம் இயற்கை ரீதியாக தாங்குஞ் சக்தியை வளர்த்துக் கொள்ளுங்கள்.

* இளங்கால்நடைகளின் தடைபடா வளர்ச்சியையும், விலங்குணவில் பற்றுக்குறையாகவிருக்கும் கனிச்சத்தியைத் தருவதன் மூலம் வளர்ந்த விலங்குகளின் வளர்ச்சியையும் பெக்கூட்றின் உறுதி செய்கிறது.
* பால்கறக்கும் பசு, கோழிகள், பன்றிகள் முதலிய பிரத்தியேகமாக அடைத்து வளர்க்கப்படும் சகல கால்நடைகளுக்கும் பெக்கூட்றின் உகந்தது.
* விலங்கின உணவு விற்பனையாளர்களிடமும் பிரபல ரசாயன பொருட்கள் விற்பனையாளர்களிடமும் பின்வரும் இலங்கையின் ஏக விநியோகஸ்தர்களிடமும் எப்பொழுதும் கிடைக்கும்:-

ஹேலீஸ் லிமிட்டட்
400, டீன்ஸ் ரோட், கொழும்பு-10.
தபால் பெட்டி 70, தொலைபேசி: 96333

HAYLEYS

VISION 31-69



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் வியட்நாமில் போர்நிலைமை சீராகிக் கொண்டிருக்கிறதாம்

## தாயகம் திரும்பிய அதிபர் நிக்ஸன் தகவல்

நியுயோர்க், ஆக. 5

**தென்வியட்நாமிலிருந்து மேற்கொண்டும் அமெரிக்கத்துருப்புகளை விலக்கிக்கொள்வது பற்றி அதிபர் நிக்ஸன் இம்மாத இறுதிவாக்கில் முடிவுசெய்வார்.**

**ஆஸியநாடுகளுக்கு விஜயம் செய்துவிட்டு தாயகம் திரும்பியுள்ள திரு. நிக்ஸன் தமது வெள்ளை மாளிகையில் உயர்தரக் காங்கிரஸ் தலைவர்களுடன்ஆலோசனைகள் நடத்தினர். அப்பொழுது மேற்கண்ட தகவலை அவர்களிடம் நிக்ஸன் தெரிவித்தார்.**

தென்வியட்நாமில் இப்பொழுது நிலைமை ஓரளவுக்கு அமைதியுற்றிருக்கிறது என்றும் திரு. நிக்ஸன் காங்கிரஸ் தலைவர்களிடம் கூறினர்.

வெளிநாடுகளுக்கு விஜயம் செய்துவிட்டுத் திரும்பியுள்ள அதிபர் நிக்ஸனை காங்கிரஸ் சபைத் தலைவர்கள் வெள்ளை மாளிகையில் சந்தித்தார்கள் அவர்கள்மத்தியில் அவர்பேசுகையில் தென்வியட்நாமிலிருந்து மேற்கொண்டு அதிகமான அமெரிக்க துருப்புகளை விலக்கிக் கொள்வதுபற்றி இந்த மாத இறுதி வாக்கில் முடிவெடுப்பேன். அங்கு இப்பொழுது ஓரளவுக்கு நிலைமைசீரடைந்திருக்கின்றது. சண்டையும் மந்தமாகவிருக்கின்றது. என்று தெரிவித்தார்.

வியட்நாமில் சண்டையை நிறுத்துவதே எமது நோக்கம். அதற்காக கம்யூனிஸ்ட்கள் ஆக்கிரமிப்பு செய்வதை அனுமதிக்கமுடியாது. அங்கு சுதந்திரமான முறையில் தேர்தல்கள் நடந்து மக்கள் தமக்குவிடுப்பமான அரசாங்கத்தை தெரிவுசெய்துகொள்ள வழிவகுக்கவேண்டும் என்பதே அமெரிக்காவின்விடுப்பம் என்ருர் அதிபர் நிக்ஸன்.

ஆஸிய நாடுகள் பற்றி அவர் குறிப்பிடுகையில், ஆஸிய நாடுகளுக்கு ஏற்கனவே நாம் ஒப்புக்கொண்ட கடமைகளை நிறைவேற்றுவோம். ஆனல் இனிமேலும் ராணுவ நடவடிக்கைகள் எதிலும் மாட்டிக்கொள்ள மாட்டோம். ஆஸியநாடுகள் தமது பிரச்னைகளைத் தாங்களே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ருர்.

### பொம்பிடோ அமெரிக்கா விஜயம்

பிரஞ்சு அதிபர் பொம்பிடோ அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவிருக்கிருர். அமெரிக்காவுக்கு வரும்படி அதிபர் நிக்ஸன் விடுத்த அழைப்பை அவர் ஏற்றுக் கொண்டிருக்கிருர். அதிபர் நிக்ஸனின் அரசியல் ஆலோசகர் திரு. கிஸிங்கர்பாரிஸில் திரு. பொம்பிடோவைச் சந்தித்து இந்த அழைப்பைக் கொடுத்தார். அதிபர் நிக்ஸனின் ஆஸிய நாடுகள் விஜயம் பற்றியும் அங்கு அவர் நடத்திய பேச்சுக்களின் விபரம் பற்றியும் திரு. கிஸிங்கர் அதிபர் பொம்பிடோவுக்கு விபரம் தெரிவித்தார். வியட்நாம் அமைதிக்காக பாரிஸில் நடைபெறும் மகாநாட்டின் அமெரிக்க தலைமைப் பிரதிநிதி திரு. ஹென்றி கெபட்லாட்ஜையும் அவர் சந்தித்துப் பேசினர்.

### மே. ஜெர்மன் பிரதமர்

மேற்கு ஜெர்மன் பிரதமர் திரு. கீஸிங்கர் இந்த வாரத்தில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவிருக்கிருர். அதிபர் நிக்ஸனுடன் விரிவான பேச்சுவார்த்தைகள் நடத்த அவர் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகின்றது.

# நிக்ஸன் ரஷ்யாவுக்கு விரைவில் போவார்?

புக்காரஸ்ட், ஆக. 3 என்று சோவியத் தூதர் அமெரிக்க ஜனாதிபதி நிக் பாஸல் நிக்ஸனிடம் கூறி அறிமுகம் செய்து வைக்கப் பட்டார். இந்தக் கோடை யில் தனது பதவியை ...

## கடவுள் மீது ஆத்திரப்பட்டு தேருக்கு தீவைத்தாராம்

சென்னை, ஆக. 5

மதுராந்தகத்தில் பெருமாள் கோவிலுக்குச்சொந்தமான 3 லட்சம் ரூபாய்மதிப்புள்ள தேருக்கு தீவைத்ததாகக் கூறப்படும் ஒருவர் நேற்றுமுன்தினம்கைதுசெய்யப்பட்டார்.

மாணிக்க நாயக்கர் என்ற இவருக்கு 20 ஆயிரம் ரூபா கடன் இருந்ததாகவும், இதனை அவரால் தீர்க்க முடியவில்லை என்றும், இதனுல் இவர் கோயில்களெல்லாம் சென்று வேண்டிக் கொண்டாரென்றும், ஆனுலும் பலன் கிடைக்காததால் 'கடவுள் இல்லை' என்ற முடிவுக்கு வந்தாரென்றும் கூறப்படுகிறது.

கடைசியில் பெருமாள் கோவிலுக்குச் சென்று தினமும், படி அரிசியும் 1 ரூபாயும் தருகிறேன்என்றுமுறையிட்டாராம். ஆனுல் நினைத்த காரியம் முடியவில்லையாம். அந்தக் கோயிலுக்குச் சொந்தமான 90 வருடங்களுக்கு முன் செய்யப்பட்ட தேருக்கு தீ வைத்தாராம்.

## 'தொடர்ந்து காந்திய வாதியாகவே இருப்பேன்'

### தமிழ் நாட்டில் கிரி

சென்னை, ஆகஸ்ட் 5

ஜனதிபதித் தேர்தலில் போட்டியிடும் திரு. வி வி. கிரி தமிழ்நாட்டுக்கு வந்து முதல்வர் கருணுநிதியைக் கண்டுபேசினர்.

திரு கிரி, தாம் போட்டியிடுவதுபற்றி இந்தியா முழுவதும் சுற்றுப்பிரயாணஞ் செய்து விளக்கிவருகிருர்.

தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. வி. நெடுஞ்செழியனேயும் சந்தித்தார். திரு. ராஜாஜியையும் சந்திப்பீர்களா என்று கேட்டதற்கு, ''அவருக்குத் தர்ம சங்கடம் ஏற்படுத்தத் தாம் விரும்பவில்லை'' என்ருர்.

முடிந்தவரையில் எல்லா வாக்காளர்களையும் சந்தித்து சிலர் ஏற்படுத்தியுள்ள தப்பபிப்பிராயங்களை அகற்றுவதற்காகத் தாம் நாடு முழுவதும் மின்னல்வேகத்தில் சுற்றுப் பிரயாணஞ் செய்துவருவதாக அவர் நிருபர்களிடம் கூறினர்.

வாக்குக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அதிருப்தியடையமாட்டேன் என்று கிரி கூறினர்.

காங்கிரஸ்கட்சியின் வேட்பாளராகத் ... ... ஜனதிபதி பதவிக்குப் போட்டி

## மூவருக்கு சிறை

### வீட்டை உடைத்து திருடினர்

வல்வெட்டித்துறை, செவ்

பருத்தித்துறையைச் சேர்ந்த பா தங்கவேலாயுதம், சி. நடேசன், சி. சபாரத்தினம் ஆகிய மூவரும் புலோலியைச் சேர்ந்த முத்துக்குமாரு காஞ்சனமாலை என்பவரின் வீட்டை உடைத்து ரூபா 7,745 பெறுமதியான தங்க நகைகளைக் களவாடியதாக பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே. விக்கினராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரிகளைக் குற்றவாளிகளாகக் கண்டு 1-ம் எதிரியான தங்கவேலாயுதத்திற்கு 9 மாதச் சிறையும், 2-ம் எதிரியான நடேசனுக்கு 6 மாதச் சிறையும், 3-ம் எதிரியான சபாரத்தினத்திற்கு 18 மாதச் சிறைத் தண்டனையும் எனத் தீர்ப்பளித்தார். —

## திருடமுயன்றூராம்

வல்வெட்டித்துறை, செவ்.

## ரயில்சேவை சீர்கேடு

அளவெட்டி, புதன்

''வடமாகாணத்தில் பளைக்கும் - காங்கேசன்துறைக்குமிடையில் நடைபெறும் ரயில் சேவை மிகவும் சீர்கேடாகவுள்ளது. ஆதலால் இதனைச் சீர்திருத்த உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என தெல்லிப்பளை தமிழரசு கிளை. காங்கேசன் துறை எம். பி. திரு எஸ். ஜே வி. செல்வநாயகத்தைக் கோரியுள்ளது.

தெல்லிப்பளைத் தமிழரசுக் கட்சி கிளைச் செயலாளர் திரு. க. சிவபாலசுந்தரம், வடமாகாண புகையிரத சேவை சீர்கேடு பற்றி காங்கேசன்துறை எம். பி. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு மகஜர் அனுப்பியுள்ளார்.

## வீடு உடைத்து திருட்டு

வவனியா, செவ்வாய்

வீடு உடைத்து 34-மூடை நெல்லும், சாமான்களும் வவனியா ரம்பைக்குளம் என்ற இடத்தில் களவாடப் பட்டுள்ளது. வவனியா பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து புலன் விசாரணை நடாத்தினர் சந்தேகத்தின் பேரில் ஜி. ஞானராசாவை கைதுசெய்தனர். சந்தேக நபர் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

## கோரிக்கை

அல்லைப்பிட்டி, செவ்வாய்

வேலணைக் கிராமத்தின் அத்தியாவசிய தேவைகளான போக்குவரத்து, மின்சாரம், குடிநீர், சுகாதாரம் போன்ற வசதிகளை விரைவில் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தீவுப்பகுதி ஐக்கிய இளைஞர்முன்னேற்றக்கழகத்தினர் கிளிநொச்சி ஆட்சி மன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினத்திடம் கடிதமூலம் கேட்டுள்ளனர்.

......

## யாழ். மாவட்ட...

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

கெந்தி அடிவைத்து பாய்தல்:- விஜயராசா (கொ. இ க.) சுந்தரலிங்கம் (யா. ம க) சுகுமார் (பரி.யோ.க. நீளம்41' 2'' புதியசாதனை) 100 மீற்றர் ஓட்டம்:

## 40 ஆண்டு சேவை



'கல்வித் தொண்டே கடவுள்தொண்டு' என்ற பொன்மொழிக்கிணங்க நாற்பதாண்டு காலம் தன்னை அப்பணிக்கு அர்ப்பணித்து, சேவையே மூச்சாகக் கொண்டு வாழ்ந்த அராலி கிழக்கு தமிழ்க் கலவன் பாடசாலைத் தலைமை ஆசிரியராக இருந்த திரு. கா. கந்தசாமி 30-7-69-ல் தமது பதவியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

'பெரிய வாத்தியார்' என்று மாணவர்களாலும், பழைய மாணவர்களாலும், அன்பர்களாலும் அழைக்கப்பட்டுவந்த இவர் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயின்று, பாலபண்டிதப் பரீட்சையில் சித்தியடைந்து ஆசிரியரானுர், ஆசிரியத் தொழிலை புனித தொழிலாக ஏற்று 'கடமை'க்காக மட்டும் செய்யாது, அதன் மீது தூயபற்று வைத்து, மனப்பூர்வமான பணியை ஆற்றினர். மாணவர்களைத் தன் பிள்ளைகளைப் போல நேசிப்பார். பிள்ளைகளின் உள்ளத்தில் இவர் அன்புக்குரியவராக இடம்பிடித்துக் கொண்டார். பெற்றோர்களுடன் நெருங்கிப் பழகினர். பிள்ளைகளின் கஷ்டங்களைப் போக்க அவ்வப்போது நடவடிக்கை மேற்கொண்டார்.

இவருடைய நாற்பதாண்டு கல்வித் தொண்டில் 21 ஆண்டை வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாசாலையிலும், பின்னர் காரைநகர் மறைஞானசம்பந்த வித்தியாசாலையிலும், அராலி அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும் கழித்திருக்கிருர்.

சமயககல்வியுடனுன கல்வியே ஒருவனுக்கு பூரணமான வாழ்வையளிக்கும் என்ற நம்பிக்கை ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் திரு. கா. கந்தசாமி அவர்களின் உள்ளத்தில் ஆசிரியத் தொழிலை ஆரம்பிக்கும் நேரத்திலேயே பசுமரத்தாணி போல் பதிந்துவிட்டது. இந்த எண்ணத்தை அவர் தன் சேவைக்காலத்தில் ஓரளவாவது நிறைவேற்றியுள்ளார் என்றே சொல்லலாம். போதிப்பதை செயலிலும் கடைப்பிடிக்கும் உயரிய குணம் இவரிடம் இருப்பது குறிப்பிடத்தக்கது. சைவசீலராகவே வாழ்கிருர்.

இவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் பலர் தமது வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்து நாட்டுக்குப் பயனுள்ளவர்களாக அரசாங்கத்துறையிலும், பொதுத்துறையிலும் பணியாற்றிக்கொண்டிருக்கிருர்கள். ஒழுக்கசீலர்களாகவும், உயரிய குணம் படைத்தவர்களாகவும் திகழும் அவர்கள் இவரைச் சந்திக்க நேர்ந்தால் தலை வணங்கி 'பெரிய வாத்தியார்' என்று மனங்குளிர மரியாதையுடன் அழைக்கத் தவறுவதில்லை.

கல்வித்துறைக்கு இவர் ஆற்றிய சேவையை மாணவ உலகமும், ஆசிரிய உலகமும் என்றும் மறக்காது.

— பழைய மாணவன்

# இன்றைய பலன்

-சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை-

ஆடி மாதம் 22-ந் திகதி (6-8-69)

**மேஷம்-** பழைய நினைவு ஒன்று வேதனையைத் தரும். அன்ருடப் பிரச்னைகளில் சிக்கல்கள் தோன்றும். பணமுடையின் காரணமாக சோர்வு தென்படும். தனிமையில் விடப்பட்டதைப்போல் தவிப்பீர்கள்.

**ரிஷபம்-** ஆணவப் போக்கினுல் மற்றவர்களின் வெறுப்பைச் சம்பாதித்துக்கொள்ளுவீர்கள் பணநெருக்கடிக்கும் இடமுண்டு. பெரியவர் ஒருவருடன் அபிப்பிராயபேதம் ஏற்படும். நாவடக்கம் நன்று.

**மிதுனம்-** இல்லத்தில் பரசவமூட்டும் சூழ்நிலை தென்படும். பாசத்தின் பிணைப்பில் நீங்கள் மெய்மறப்பீர்கள். செலவுககு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும். விருந்தினர்களும் வருகை தருவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விரைவில் போவார்?

புக்காரஸ்ட், ஆக. 3

அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் அநேகமாக விரைவில் ரஷ்யாவுக்கு விஜயம் செய்வார். யுகோஸ்லேவியாவுக்கும் அவர் விஜயம் செய்டக்கூடும். இங்குள்ள சோவியத் தூதர் பாஸோவுடன் பேசிக் கொண்டிருந்தபோது இந்தத் தகவலை நிக்ஸன் தெரிவித்தார். இந்தச் சந்திப்பு ருமேனியாவின் செஸன்குஅதிபர் நிக்ஸனுக்கு விருந்து அளித்தபோது ஏற்பட்டது.

"நான் காக்கஸ் பிராந்தியத்தைச் சேர்ந்தவன்" என்று சோவியத் தூதர் பாஸல் நிக்ஸனிடம் கூறினுர்.

சோவியத் ரஷ்யாவின் பல பகுதிகளுக்கு தாம் விஜயம் செய்திருப்பதாகவும் அநேகமாக விரைவில் மீண்டும் ரஷ்யாவுக்குத்தாம் விஜயம் செய்யக்கூடும் என்றும், அப்போது ரஷ்ய தூதரின் சொந்த ஊர் உள்ள பிராந்தியத்துக்கு விஜயம் செய்வதாகவும் நிக்ஸன் பதில் கூறினுர்.

யூகோஸ்லேவியாவின் தூதர் திரு. ஜாக்ஸா பெப்ரிக், திரு. நிக்ஸனுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். இந்தக் கோடையில் தனது புதல்வியை யூகோஸ்லேவியாவுக்கு அனுப்பிவைக்கப்போவதாக நிக்ஸன் கூறினுர். யூகோஸ்லேவியாவின் ஜனுதிபதி டிட்டோவுக்குத் தனது அன்பைத் தெரிவிக்குமாறு அவர் யூகோ. தூதரைக்கேட்டுக்கொண்டார்.

"நான் யூகோஸ்லேவியாவுக்கு சென்றதில்லை. ஆனுல் ஏதேனும் ஒருநாள் நான் அங்குசெல்வேன்" என்ருர் நிக்ஸன்.

# ம. பொ. சி. போராட்டம் 20-ம் திகதி ஆரம்பம்

சென்னை, ஆகஸ்ட் 5

மாநில சுயாட்சி கோரி இம் மாதம் 20-ம் திகதி தமிழரசுக்கழகம் போராட்டம் நடத்த விருக்கிறது. இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு திரு. சிவஞான கிராமணியார். சென்னையில் மறியல் செய்ய முடிவு செய்திருக்கிருர். இதுசம்பந்தமாக திரு சிவஞானம் ஒரு கூட்டத்தில் விடுத்த அறிக்கை விபரம்:

"இம்மாதம் 20-ம் தேதி நடக்கும் போராட்டம், முதல் கட்ட போராட்டம் தான்.

அன்று சென்னை, காஞ்சிபுரம், திருச்சி, தஞ்சை, கோவை, மதுரை, நெல்லை மற்றும் மாவட்ட தலை நகர்களில் போராட்டம் நடக்கும் அங்குள்ள டெல்லி அரசாங்க அலுவலங்கள் முன்புமறியல்நடததப்படும்.

இந்தப் போராட்டத்தில் தமிழக சட்டமன்ற உறுப்பினர் ஒருவர், மேல் சபை உறுப்பினர்கள் 2 பேர், மற்றும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், பஞ்சாயத்து தலைவர்களும் கலந்து கொள்கிருர்கள்.

சென்னையில் நடக்கும் போராட்டத்தில் நான் கலந்து கொண்டு மறியல் செய்வேன்.

போராட்டத்தில் ஏராளமான பெண்களும் கலந்து கொள்கிருர்கள். அவர்களில் சரோஜினி நாராயணசாமி. குருவாயூர் பொன்னம்மாள், மதுரை வரலட்சுமி உடையப்பா ஆகியோர் முக்கியமானவர்கள்.

இவர்களைத் தவிர, கல்லூரி மாணவிகள் பலரும் பங்கு பெறுகிருர்கள்.

இந்தப் போராட்டம் பற்றி தமிழக அரசின் நிலைமை என்ன என்று அறிவதற்காக, கடந்த மாதம் முதல்-அமைச்சர் கருணுநிதிக்கு ஒரு கடிதம் எழுதினேன். இது குறித்து விரைவில் என்னை அழைத்துப் பேசுவார் என்று எதிர் பார்க்கிறேன்.

### தி. மு. க. ஆதரவு தேவை

எங்களுடைய போராட்டத்துக்கு தி. மு. கழகத்தின் ஆதரவு தேவை. இந்தப் போராட்டத்தை ஆதரிப்பதாக, முன்பு கருணுநிதி கூறினுர்.

அதற்காக அவரை பாராட்டுகிறேன். பக்தவச்சலமோ, காமராஜரோ இப்படி கூறமாட்டாாகள். ஏன் என்ருல். அவர்கள் டெல்லியிடம் டிக்கெட்டு வாங்குகிறவர்கள். ஆனுல் கருணுநிதியோ டெல்லிக்கு டிக்கெட் கொடுப்பவர்.

இந்தப் போராட்டத்தில் வன்முறை, பலாத்காரம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வோம்.

போராட்டத்தில் ஈடுபடும் எங்களை, தமிழ் நாட்டு பொலிசார் கைது செய்ய வருவார்கள். ஆனுல் வடுவதுவிருப்பத்தால் அல்ல விதி வசத்தால். "எங்களை கைது செய்ய டெல்லி அரசாங்கத்தின் பொலிசை அனுப்புங்கள்;" என்று அப்போது நாங்கள் முழக்கம் செய்வோம்."

—

### மெரினர் 7 அனுப்பிய சிறப்பான படம்

ஹூஸ்டன், ஆகஸ்ட் 5

அமெரிக்காவின் மெரினர்-7 செயற்கைக் கிரகம் செவ்வாய்க் கிரகம் பற்றிய மிகவும் சிறந்த படங்கள் சிலவற்றை அனுப்பிவைத்துள்ளதாம்.

செவ்வாய்க் கிரகத்தில் கால்வாய்கள் இருப்பதாகக் கூறப்படும் பகுதியையும் இக்கிரகம் படம் பிடித்து அனுப்பியுள்ளது. மெரினர்-7 ஏற்கனவே அனுப்பிய படங்கள் தெளிவில்லாமல் இருப்பதாக்க் கூறப்படுகின்றது.

மெரினர்-7 செவ்வாய்க் கிரகத்தை 3ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவில் கடந்து செல்லும். ஏற்கனவே செவ்வாய்க் கிரகத்தைப் படம் பிடித்து அனுப்பிய மெரினர்-6 சூரியனைச் சுற்றும் பாதையில் திரும்பியிருக்கின்றது. மெரினர்-7 கிரகமும் சூரியனைச் சுற்றும் பாதையில் திரும்பிவிடும்.

கிடைக்காவிட்டாலும் அதிருப்தியடையமாட்டேன் என்று கிரி கூறினுர்.

காங்கிரஸ்கட்சியின் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்படாததால்தான் ஜனுதிபதி பதவிக்குப் போட்டியிட முன்வந்திருப்பதாகக் குற்றஞ் சாட்டப்படுவதை அவர் மறுத்தார்.

என் பெயரைப் பிரேரிக்குமாறு எவரையும் நான் கேட்கவில்லை. நான் ஒருசிலரின் தயாரிப்பு என்று கூறுவது என்னைப் புண்படுத்துகின்றது ஆனுல் மக்கள் என்னிடம் அன்பாக இருக்கிருர்கள். என்னுடைய நேர்மையையும் குணத்தையும் பற்றிக் கேட்பதற்கு இவர்கள் யார் என்று கிரி கேட்டார்.

ஒரு காந்தீயவாதியாக உண்மைக்கும், நேர்மைக்கும் போராடப்போவதாக அவர் கூறினுர்.

காங்கிரஸ்கட்சியில் விவகாரங்கள் நடைபெறுகின்ற விதத்தின் காரணமாக நிச்சயமாக நான் காங்கிரஸ்காரன் அல்ல என்று அவர் கூறினுர். வாழ்வின் இறுதிவரையில் நான் காந்தீயவாதியாகவே இருப்பேன் என்ருர்.

கம்யூனிஸ்டுகள் தம்மை ஆதரிப்பதற்காகத் தாம் கம்யூனிஸத்தை நோக்கிச் செல்வதாகக் கூறப்படுவதை அவர் மறுத்தார். வாழ்க்கை முழுவதும் தொழிற் சங்கவாதியாக நான் இருந்துவருவதை மக்கள் அறிவார்கள் என்ருர்.

கம்யூனிஸ்டுகளும், தி. மு. க., ச. சோ, பி. சோ, பாரதீய கிராந்திதளம் போன்ற கட்சிகள் திரு கிரிக்கு ஆதரவுதெரிவித்துள்ளன. இக்கட்சிகள் தாமாகவே ஆதரிக்க முன்வந்துள்ளன என்று கிரி சுட்டிக் காட்டினுர்.

—

### பாகிஸ்தான் மந்திரிசபை

லாகூர். ஆகஸ்ட் 4

பாகிஸ்தானில் இன்று 7 பேர் மந்திரிகளாகப் பதவியேற்றனர். பாக். அதிபர் யாஹ்யாஹான் இவர்களுக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைத்தார். பொதுமக்கள் மத்தியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட இவர்கள்எந்த அரசியல்கட்சித் தலைவர்களும் அல்ல. பொதுத் தேர்தல் நடக்கும்போதும் இவர்கள் அதில் கலந்துகொள்ள மாட்டார்கள்.

னுக்கு 6 மாதச் சிறையும், 3-ம் எதிரியான சபாரத்தினத்திற்கு 18 மாதச் சிறைத் தண்டனையும் எனத் தீர்ப்பளித்தார். —

### திருடமுயன்ருராம்

வல்வெட்டித்துறை, செவ்.

ஹட்டனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது அச்சுவேலியில் வசித்துவருபவருமான ஏ. தங்கராசா என்பவர் நேற்று இரவு உடுப்பிட்டி அம்மன் கோவிலிலுள்ள மணியொன்றை களவாடும் நோக்கமாகக் கழற்றிக்கொண்டிருந்ததாகப் பொதுமக்களால் கண்டுபிடிக்கப்பட்டு வல்வெட்டித்துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டார். இது சம்பந்தமாக அந்நேரத்தில் அவ்விடத்தில் சந்தேகத்திற்கிடமாக நின்ற கார்ஒன்றையும் பொலிசார் தேடுகின்றனர். வல்வெட்டித்துறைப் பொலிஸ் பகுதியில் பல கோவில்களில் மணிகள்களவு போனது குறிப்பிடத்தக்கது பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர். ......

### புதியநிபந்தனை

சுழிபுரம், செவ்வாய்

ஒரு வயது நிரம்பிய குழந்தைப் பிள்ளைகளின் கூப்பனை கிராம சேவையாளரிடமிருந்து பெறுவதற்கு புதிய நிபந்தனை ஒன்று விதிக்கப்பட்டுள்ளது. பிள்ளைக்கு அம்மைப்பால்தடுப்புமருந்து குத்தியதற்கான அத்தாட்சிப் பத்திரத்தை ஸ்தலசுகாதார பரிசோதகரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.

இந்த அத்தாட்சிப் பத்திரத்தை கிராம சேவையாளரிடம் சமர்ப்பித்தால்தான் இனிமேல் புதிய கூப்பன் புத்தகத்தை பெறமுடியும்.

### புதியசெயலாளர்

சுழிபுரம்' செவ்வாய்

மூளாய்கூட்டுறவு வைத்தியசாலையின் புதிய நிர்வாக செயலாளராக ஓய்வு பெற்ற தபால் மாஅதிபர் திரு க. பேரம்பலம் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

......

### மாபெரும் பொருட்காட்சி

வவனியா, செவ்

அகில இலங்கை கல்விநூற்ருண்டு விழாவை யொட்டி வவனியா மாவட்டப்பாடசாலைகளின் பொருட்காட்சியும், கலைவிழாவும் வடமாநிலவித்தியாதிபதி திரு. சி. தணிகாசலம் தலைமையில் நாளை வவனியா மகாவித்தியாலயத்தில் நடைபெற விருக்கின்றன.

### யாழ். மாவட்ட...

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

கெந்தி அடிவைத்து பாய்தல்:- விஜயராசா (கொ. இ க.) சுந்தரலிங்கம் (யா. ம க) சுகுமார் (பரி. யோ. க. நீளம்41' 2" புதியசாதனை)

100 மீட்டர் ஓட்டம்: விஜயராஜா(கொ. இ க) சுகுமார் (பரி. யோ. க) யோகராசா(ந. க).

தடிஊன்றிப்பாய்தல்:: சிவராசா (கோ. கி. க) றேமன்ட் (பரி. யோ. க) அனந்தலிங்கம்(பரி. யோ. க.)

ஈட்டி எறிதல்:- ஜெயபிரகாஸ்[பரி. யோ. க] பவானந்தன்[கொ. இ. க] பரராசசிங்கம்[கொ. இ. க] ]நீளம் 153' 9 1/2" புதியசாதனை].

குண்டு எறிதல்:- ஜெயபிரகாஸ்[பரி. யோ. க] கதிர்காமநாதன்[பரி. யோ. க] சச்சிதானந்தன் [கொ. இ. க] [நீளம் 36'9 1/2" புதிய சாதனை]

நீளம்பாய்தல்:- விஜயராஜா (கொ. இ க) சுந்தரலிங்கம் [யா. ம. க] பிரான்சிஸ் [அர்ச். அ. க.] [நீளம் 20' 6" புதியசாதனை]

உயரம் பாய்தல்: சுந்தரலிங்கம் [யா ம. க] கூல் [பரி. யோ. க] சிறிரங்கன்] யா. ம. க.] [உயரம் 5'9 1/4" புதிய சாதனை].

4X100 அஞ்சல் ஓட்டம்:- பரி. யோவான் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி யாழ். இந்துக்கல்லூரி[நேரம் 48.9 புதியசாதனை]

4X100 அஞ்சல் ஓட்டம்:- பரி. யோவான் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ். மத்தியகல்லூரி.

[தே. நி.]

ரிஷபம்- ஆணவப் போக்கினுல் மற்றவர்களின் வெறுப்பைச் சம்பாதித்துக்கொள்ளுவீர்கள் பணநெருக்கடிக்கும் இடமுண்டு. பெரியவர் ஒருவருடன் அபிப்பிராயபேதம் ஏற்படும். நாவடக்கம் நன்று.

மிதுனம்- இல்லத்தில் பரசவமூட்டும் சூழ்நிலை தென்படும். பாசத்தின் பிணைப்பில் நீங்கள் மெய்மறப்பீர்கள். செலவுககு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும். விருந்தினர்களும் வருகை தருவர்.

கடகம்- அவசரப்போக்கினுல் அரிய சந்தர்ப்பத்தையே இழக்கநேரிடலாம். ஏக்கத்தின் சாயலுக்கும் இடமுண்டு. மோசடி நடக்கக்கூடும். விழிப்புடன் இருக்கவும். இன்று போதைப்பொருட்களைத் தவிர்க்கவும்.

சிம்மம்- வழிநடத்தும் பெருமை உங்களை வந்து சேரும். அறிவாற்றலினுல் உங்கள் செல்வாக்குப் பெருகும். அன்னைவழி ஆதரவுக்குத் தாராளமாக இடமுண்டு. வாகனச் சொந்தக்காரர்களுக்கு வளமான நாள்.

கன்னி- இலட்சியப்பயணத்தில் இன்று எதிர்பாராத வெற்றி கிடைக்கும். மக்கள் வழியால் மதிப்பு உயரும். ஆலயத் திருப்பணிகளில் ஈடுபடுவீர்கள். இரக்க சிந்தையின் மூலம் பொருட்செலவும் உண்டாம்.

துலாம்- அருகிலேயே ஆபத்துக் காத்திருக்கலாம். எந்த விடயமானுலும் அதிக அவதானம் வேண்டும். எதிரிகளின் தொல்லைகளும் தலைதூக்கும், வழக்கு விவகாரங்களைத் தவிர்த்துக்கொள்ளவும்.

விருச்சிகம்- அன்பின் வழியில் வாழ்க்கை நடக்கும். அயலவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் கணவன்மனைவி உறவு சுமுகமாக இருக்கும் நீண்டநாள் பிரச்னைகளுக்கு இன்று நல்ல முடிவு காணப்படும். சுபதினம்.

தனுசு- கோபக்குணம் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கல் மூலம் பிணககுகள் தோன்றக்கூடும் இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும். தனிவழிப் பயணம் போபவர்கள் மிகவும் கவனமாக இருப்பது நன்று

மகரம்- கற்றதினுல் பயன் இன்று கண்டிப்பாகக் கிடைக்கும். பொதுமக்களின் கவனம் உங்கள் பக்கம் திரும்பும் தந்தைவழி மூலம் உதவிகள் கிடைக்கலாம். துணிச்சலுடன் செயலாற்றுவதினுல்வெற்றியடைவீர்கள்.

கும்பம்- பொதுவாக எல்லாவிடயங்களிலும் முன்னேற்ற நிலைமை தென்படும். பெரியவர்களுடன் தொடர்புகள் ஏற்படும். கடமையாற்றும் இடத்தில் பதவி உயர்வு கிடைக்கலாம். இடமாற்றத்துக்கும் இடமுண்டு.

மீனம்- தேடியபொருள் கைக்குவந்துசேரும். உற்சாகமாகக் கடமையில் ஈடுபடுவீர்கள். மேலிடத்துச் செய்தி உங்களுக்கு நிம்மதியைத் தரும். பரந்தநோக்கினுல் பாராட்டுதல்களையும் பெறுவீர்கள்.


## தொழில் வாய்ப்பு

லீவர் சகோதரர்கள் (இலங்கை) தாபனத்தார் தாம் குறிப்பிட்டறிவிக்குங் காலங்களுக்கு மட்டும் வீட்டுக்கு வீடு சென்று பொருள் விற்போர்(தற்காலிக) வேலைக்காக யாழ்ப்பாணத்தில் பதிவாக இருக்கும் இளமங்கையருக்குத்தொழில் வாய்ப்பளிக்க விரும்புகிருர்கள். விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கும் 30வயதுக்குமிடைப்பட்டவர்களாயும், ஆங்கிலத்திலும். தமிழிலும் தேர்ச்சிபெற்றவர்களாயுமிருத்தல் அவசியம். அவர்கள் தன்னழகுடையவர்களாயும், வெளி வியாபார வேலைகளில் ஊக்கமுடையவர்களாயுமிருத்தல் வேண்டும்.

இத்தேவைகளைப் பூர்த்திசெய்யும் விண்ணப்பதாரர்கள் 1969-ம் ஆண்டு ஆகஸ்ட் 8-ம் திகதி ஒரு நேர்முகப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலுள்ள பாம்கோட்டிற்கு காலை 10 மணிக்கு தயவுசெய்து வரவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

தேவைகளை அதிகரித்துக்கொண்டே செல்வது நாகரிகமல்ல. தானே விரும்பி தேவைகளைக் குறைத்துக்கொள்ளவேண்டும்.

—மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆடி மாதம் 22-ந் திகதி (6 - 8 - 69)

## பஸ் ஊழியர் வேலை நிறுத்தம்

இலங்கைப் போக்குவரத்துச்சபையின்வடபிரதேச ஊழியர்களின் வேலைநிறுத்தம் நீடித்துவருகிறது. வேலைநிறுத்தம் நீடிப்பது யாருக்கும் நன்மையல்ல.

இந்த வேலைநிறுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வருவதற்கபக இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியிலேயேமுடிவடைந்துள்ளன. இருதரப்பினரும் தங்கள் பிடிவாதத்தைக் கைவிட்டு பொதுமக்களின் நலனைக்கருதி மனம்விட்டுப் பேசி வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டியது அவசியம். ஐந்து தினங்களாகியும் வேலைநிறுத்தம் நீடிப்பதால் இனியும் தாமதம் செய்யாது அமைச்சர் உடனடியாகத் தலையிட்டு இதற்குஒரு முடிவுகாணமுன்வரவேண்டும்.

பருத்தித்துறைபஸ்டிப்போவைச் சேர்ந்த ஊழியர்களின் வேலைநேரத்தைப்புதியமுறையில் பிரித்து வகுந்து அட்டவணை தயாரித்தது தான் இந்த வேலைநிறுத்தத்துக்கு மூலகாரணம் என்று தெரிகிறது. ஊழியர்கள் வேலை செய்யமுடியாதென்று கூறவில்லை. புதிய அட்டவணையின்படி வேலைசெய்வதிலுள்ள கஷ்ட நஷ்டங்களை அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றனர். அட்டவணை தயாரித்தவர்களும் ஊழியர்களைவேண்டுமென்றே கஷ்டப்படுத்தும் நோக்கத்துடன் தயாரிக்கவில்லை. பிரயாணிகளுக்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கும் பயன்தருமென்ற நம்பிக்கையில், தான் புதிய அட்டவணையைத் தயாரித்திருக்கவேண்டும். புதிய அட்டவணையின்படி வேலைசெய்ய முடியாதென்று மறுப்பதோ புதிய அட்டவணையை மாற்ற முடியாதென்று பிடிவாதம் பிடிப்பதோ நல்லதல்ல. இருதரப்பினரும் விட்டுக்கொடுத்து ஒரு சுமுகமான முடிவு காண்பதுகடினமல்ல.

வேலைநிறுத்தம்நீடிக்கநீடிக்கதேவையற்றஅசம்பாவிதசம்பவங்களும்தலைநீட்டி அமைதியைக்குலைப்பதாகஇருக்கின்றன. வேலைநிறுத்தத்தினுல் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குப்பெருநஷ்டம்; ஊழியருக்குப் பெரும் கஷ்டம். இவை தவிர பொதுமக்கள் அதாவது பிரயாணிகளுக்கு சொல்லொணுக் கஷ்டமும் நஷ்டமும். இனியும் இதை நீடிக்கவிடாது அமைச்சர் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## தி. மு. க. மந்திரிசபை

தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. மு. கருணுநிதி தமது மந்திரிசபையை மாற்றி அமைத்து திரு. நெடுஞ்செழியன் உட்பட மேலும் மூவரைச் சேர்த்து விஸ்தரித்திருக்கிருர். அனுபவமும் ஆற்றலும் நிறைந்த திரு. நெடுஞ்செழியன் மீண்டும் மந்திரிசபையில் சேர்ந்திருப்பது திரு. கருணுநிதிக்கு மட்டுமல்ல தமிழ் நாட்டுக்கே பெரும் பயனளிப்பதாக இருக்கும்.

திரு. அண்ணுதுரையின் மறைவுக்குப் பின் திரு. மு. கருணுநிதி தமிழ் ... பிளவை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சமும் பல இடங்களிலும் நிலவியது தங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கு அதிக இடமளிக்காமல் கழகத்தின்நலனையும்நாட்டின் நலனையும் பெரிதாகக் கருதி திரு. கருணுநிதியும் திரு.நெடுஞ்செழியனும் மனம் விட்டுப் பேசி பொதுச் செயலாளர் பதவி சம்பந்தமாக ஓர் உடன்பாட்டுக்கு வந்ததுடன் திரு.நெடுஞ்செழியன் மீண்டும் மந்திரிசபையில் சேர்ந்து கொள்ள ஒப்புக்கொண்டதும் இருவரின் ராஜதந் ...

இந்திய ஜனுதிபதி தேர்தல்

# நாட்டின் நன்மையா? கோஷ்டி நன்மையா?

இந்தியாவின் அடுத்த ஜனுதிபதி யார்? ரெட்டியாரா? கிரியாரா? இதைப் பற்றிஇலங்கையில்கூட பலர் இப்போது வாதிக்கின்ருர்கள். காரணம், இந்தியாவிலே அமைதியும் சுபீட்சமும் நிலவினுல்தான் இலங்கையும் நிம்மதியாக வாழ முடியும்,

சஞ்சீவிரெட்டியார் தமது லோகசபைத் தலைவர் பதவியை விட்டுவிட்டுத் தீவிர பிரசாரம் செய்வதுபோல், வி. வி. கிரியும் உப ஜனுதிபதி பதவியை விட்டு, வங்காளம் முதலிய இடங்களுக்குச் சென்று தமக்கு ஆதரவு தேடுகிருர்.

இருவரும் தேசாபிமானமுள்ள ஆந்திரர்கள். தலைமைப் பதவிக்கு எல்லாத் தகுதியுமுள்ளவர்கள். இருவரும் தமது நண்பர்களென்றும், இருவரும் வெற்றி பெறவேண்டும் என்பதே தமது விருப்பமென்றும் ஆசார்யகிருபாளனி கிண்டலாகக் கூறுகின்ருர்! இதில் ரெட்டியார்தான் வெற்றி பெறுவாரென்றும், காங்கிரஸ் கட்சிக்கு மெஜாரிட்டி இருப்பதுடன், வேறு கட்சிகளிலிருந்தும் சிலர் அவரை ஆதரிப்பரென்றும் ஒருசாரார் கருதுகின்றனர்.

இவ்விஷயத்தில் காங்கிரஸுக்குள்ளாகவே பிளவும் கருத்துவேற்றுமையும் ஏற்பட்டிருப்பதாயும், கிரிக்கு எதிர்க்கட்சி வாக்குகள் கிடைப்பதுடன், காங்கிரஸிலிருந்தும் ரகசியமாக ஆதரவு கிடைக்கலாமென்றும் பிறிதோர் சாரார் நம்புகின்ருர்கள்.

காங்கிரஸ் அபேட்சகரான ரெட்டியாரை ஆதரித்து ஒரு வேண்டுகோள் விடுமாறு பிரதமர் இந்திரா காந்தியைக் கேட்டதற்கு அவர் மறுத்துவிட்டார். பிரதமர் பதவி வகிப்பவர், இவ்விதம் தலைவர் தேர்தலில் பகிரங்கமாக ஈடுபடுவதை ஆட்சேபித்து முன்னர் வழக்குப் போடப்பட்டதாகக் காரணம் சொன்னுர்.

காரணம் எதுவாயிருப்பினும், அவர் முதலில் கிரி அல்லது ஜகஜீவன்ராமே தலைவர் பதவிக்கு வரவேண்டுமென விரும்பினுர். அவருக்கு மாருக, காங்கிரஸ் பார்லிமெண்ட் ஆலோசனைக் குழுவிலே ஐந்துபேர்

**கே. பி. அரன்**

(சின்டிகேட்) சேர்ந்துகொண்டு, பிரதமர் இந்திராவின் யோசனையை எதிர்த்து, சஞ்சீவிரெட்டியாரின் பெயரை பிரேரித்து அதை நிறைவேற்றவும் செய்தனர். இது பிரதமர் இந்திராவுக்கு ஏற்பட்ட பெரிய தோல்வியே.

'சின்டிகேட்' என்ற அந்தக் கோஷ்டியைச் சேர்ந்த ஐவர் யார் தெரியுமா? எஸ். கே. பட்டீல், கே. காமராஜ், அதுல்யாகோஷ், நிஜலிங்கப்பா, சாவன் இவர்களேயாவர்.

இந்திராவுக்குப் பதிலாக மொரார்ஜிதேசாயைப் பிரதமராக்கலாம் என்பது இவர்களது திட்டமாம். சிலவருட காலமாக இந்தக் கோஷ்டி காங்கிரஸுக்குள்ளிருந்து வேலை செய்துவந்தது.

மந்திரி சபையிலிருந்து மொரார்ஜியை இந்திரா காந்தி வெளியேறும்படி செய்தபின் இந்த 'சின்டிகேட்' கோஷ்டி பலமும், செல்வாக்கும் குறைந்து சிதைந்துவிட்டதாகத் தெரிகிறது.

தமது யோசனைக்கு மாருக நிறுத்தப்பட்டுள்ள ரெட்டியாரை, பிரதமர் இந்திரா ஆதரிப்பது கசப்பாகத்தான் இருக்கும். என்றுலும் கட்சிக் கட்டுப்பாடென்ற முறையில் அவர் அவ்விதமே செய்வதாக அறிவித்துள்ளார்.


தலைவர் பதவிக்கு மொத்தம் 15 பேர் போட்டியிடுகிருர்கள். ஆனுல் மேற்குறித்த இருவருக்குள் ஒருவருக்குத்தான் 'சான்ஸ்' உள்ளது. போட்டி பலமாக இருப்பதால், இதில் யார் வெற்றிபெற்றுலும், அவருக்கு நாட்டில் பலத்த எதிர்ப்பும், அரசியல் விரோதிகளும் ஏற்படுவர்.

பெரிய நாடான இந்தியாவுக்கு இச்சமயம் பொது மக்களுடைய ஏகோபித்த நம்பிக்கையையும், அபிமானத்தையும்பெற்ற ஒரு தலைவரே தேவை. அப்படி வர வேண்டுமாயின் இவ்விருவரில் ஒருவர், தேசாபிமானத்துடன் விட்டுக்கொடுத்துப் போட்டியிலிருந்து விலக வேண்டும்.

'சின்டிகேட்' கோஷ்டியினர் ரெட்டியாரை அவ்விதம் செய்யச் சொல்லுவார்களா? தேசத்தின் நன்மையை முன்னிட்டு அவ்விதம் செய்தால், மூத்தவரும், சுயேட்சைவாதியும் எல்லாவிதங்களிலும் தகுதி வாய்ந்தவருமான கிரி, இந்தியாவின் அடுத்த ஜனுதிபதியாகி, காங்கிரஸ் உள்ளிட்டு இந்தியாவின் மதிப்பும் உலகில் உயருவதாக இருக்கும்.


'சின்டிகேட்'டுக்கும், பிரதமருக்கும் ஏற்பட்டுள்ள தகராறின் பயனுகவே தாம் பலி வாங்கப்பட்டுள்ளதாகக் கிரி தெரிவிக்கிருர். 'சின்டிகேட்' இன்னும் விட்டுக்கொடுக்காமல் பிடிவாதம் செய்யப்போகிறதா? நாட்டின் நன்மையைவிட ஒரு கோஷ்டியின் நன்மைதான் பெரிதா? இந்தியாவின் எதிர்காலத் தலையெழுத்து இக்கேள்விக்கான பதிலில் ...

# வீணைகானம்



இன்று

# வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் தேவி உற்சவம் ஆரம்பம்



வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம் வைத்திலிங்கச்செட்டியாரவர்கள் இற்றைக்கு 175 வருடங்களுக்கு முன்னர் (கி. பி. 1790ல்) அமைக்கப்பட்டது. அச்சமயம் ஒல்லாந்தரால் இலங்கையிலிருந்த சைவ சமயக் கோவில்களெல்லாம் தகர்த்தெறியப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

இத் தேவஸ்தானத்திற்கு மூன்று சுற்றுப் பிரகாரங்களுண்டு. இங்குள்ள தெட்சணுமூர்த்தி மண்டபத்துக்கு முன்னுலிருந்தே நாவலர் பிரான் பிரார்த்தனைசெய்து நற்பணியாற்றினர். சைவசமயப் பிரசங்கங்களையும் முதன்முதலாக இங்குள்ள மண்டபத்திலேயே ஆரம்பித்துவைத்தார். வெள்ளிக்கிழமை தோறும் மகோற்சவகாலங்களிலும் நாவலர் பிரான் ஆரம்பித்துவைத்த பிரசங்கம் ...

தொன்றுதொட்டு இன்று வரை சமய நற்பணியாற்றும் இத் தேவஸ்தானத்தில் அறுபத்துமூவர் விக்ரகங்களும் தைமாதத்தில் பிரதிஷ்டைசெய்ய ஏற்பாடாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

"சிவதொண்டன்" திரு கி. நடராசன்ஆசிரியர் இங் வெள்ளிக்கிழமை தோறு பெரியபுராண விரிவுரை நிகழ்த்திவருகின்ருர்.

அற்புதங்கள் நிறைந்த இவ்வாலயத்தைத் தரிசித்து அடியார்கள் உய்வோமாக.

-'அவனடியான்'

# கல்விநூற்றுண்டுவிழாவும் 13,000 'பட்டதாரிகளும்

இந்த நாட்டில் இப்பொழுது 13,000 பட்டதாரிகள் வேலையற்றிருக்கிருர்கள். கல்வி நூற்றுண்டு விழா கொண்டாடும் இவ்வேளையில் இவ்வித தகவலும் வெளிவந்துள்ளது. இதுவும் நாட்டின் கல்வி வளர்ச்சியைத்தான் காட்டுகின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஏனெனில் படிக் ...


கின்ரேம். ஆனுலும் இப்பொழுது புதிதாக வந்துள்ள 'சியவச' சீட்டிமுப்பு இந்த இலவசத்தைப் பின்புறமாக இழுக்கத் தலைப்பட்டுள்ளதுபோல் தோன்றுகின்றது மாணவர்கள் சிலர் ஆசிரியருக்குத் தெரியாமல் தலைமறைவாகத் திரிவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கிறதாம். இதனுல் ஆசிரியர்கள் தமது சம்பளத் ...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சேர்ந்திருப்பது திரு. கருணாநிதிக்கு மட்டுமல்ல தமிழ் நாட்டுக்கே பெரும் பயனளிப்பதாக இருக்கும்.

திரு. அண்ணுதுரையின் மறைவுக்குப் பின் திரு. மு. கருணாநிதி தமிழ் நாட்டின் முதல் அமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டதும் மந்திரிசபையில் அங்கம் வகிப்பதற்கு திரு. நெடுஞ்செழியன் மறுத்தபோது துரதிர்ஷ்டம் என்று நாம் இதே பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். திரு. கருணாநிதிக்கும் திரு. நெடுஞ்செழியனுக்கும் கொள்கை வேறுபாடில்லை. ஆனால் முதலமைச்சர் தெரிவைத் தொடர்ந்து சிறிது கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இந்தக் கருத்து வேற்றுமை தி. மு கழகப் பொதுச் செயலாளர் பதவி காரணமாக பெரிதாகி கழகத்துக்குள்ளே ஏற்பட்ட பிளவு செயலாளர் பதவி சம்பந்தமாக ஓர் உடன்பாட்டுக்கு வந்ததுடன் திரு. நெடுஞ்செழியன் மீண்டும் மந்திரிசபையில் சேர்ந்து கொள்ள ஒப்புக்கொண்டதும் இருவரின் ராஜதந்திரத்துக்கும் நாட்டுப்பற்றுக்கும் சேவைமனப்பான்மைக்கும் எடுத்துக் காட்டு.

அரசியல் தலைவர்களுக்கிடையிலும் அரசியல் கட்சிகளுக்கிடையிலும் கருத்து வேறுபாடு கொள்கை வேறுபாடு இருப்பது சகஜம். ஆனால் இந்த வேறுபாடு நாட்டின் நலனையோ சமூகத்தின் நலனையோ பாதிப்பதாக இருக்கக் கூடாது. திரு. கருணாநிதியும் திரு. நெடுஞ்செழியனும் காட்டியுள்ள முன்மாதிரியை நமது நாட்டில் தமிழ்த் தலைவர்கள் பின்பற்றினால்.....?



வீணை நரம்புகளில் பழக்கப்பட்ட மென்விரல்கள் தவழ்ந்து விளையாடியபோது அதிலிருந்து பிறந்த இனிய நாதம் ஒரு தனி சுகத்தை அளிப்பதாக இருந்தது. கவலைகளெல்லாம் எங்கோ ஓடி ஒளிந்துமனதில் இசை மட்டுமே நிறைந்துகொண்டிருநதது

இந்த இதமான அனுபவம் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ் நகர மண்டபத்தில் எனக்கு ஏற்பட்டது. வர்த்தகப் பிரமுகரான ஏ. பேரம்பலத்தின் புதல்வியான செல்வி திவ்விய ரஞ்ஜனியின் வீணுகானத்தைக் கேட்டவர்கள் நிச்சயம் இந்த அனுபவத்தையே பெற்றிருப்பார்கள்.

நல்ல குருவின்கீழ் ஒழுங்காக, முறையாக தெளிவாகப் பெற்ற பயிற்சியை தனது கையில்ஏந்திய உருத்திரவீணையால் இசை எழுப்பிக் கொண்டிருந்தாம் செல்வி திவ்விய ரஞ்ஜனி கு

கேட்' இன்னும் விட்டுக் கொடுக்காமல் பிடிவாதம் செய்யப்போகிறதா? நாட்டின் நன்மையைவிட ஒரு கோஷ்டியின் நன்மைதான் பெரிதா? இந்தியாவின் எதிர்காலத் தலையெழுத்து இக்கேள்விக்கான பதிலில் அடங்கியுள்ளது.

இசையுலகில் தனக்கென்ரேர் தனி இடத்தையும் தனிப்பாணியையும் வகுத்து நல்ல கலைஞர்களை கலையுலகுக்கு அளிக்கும் நற்பணியாற்றும் இசைப் பேராசிரியர் எம். ஏ. கல்யாண கிருஷ்ணபாகவதரின் சிஷ்யையான இவர் கர்னுடக இசைக்குப் புதுமெருகூட்டுவது போல அழகாகவும் அருமையாகவும் வாசித்தார்.

ஹம்சத்வனி ராகத்தில் வாசித்த வாதாபி கணபதி கீர்த்தனை வீணையுடன் பல காலம் ஒட்டிப்பழகிய அனுபவக் கலைஞர் ஒருவருடைய விரல்கள் மீட்பது போன்ற ஒரு இனிய நினைவைத் தந்தது. பஞ்சரத்தின கீர்த்தனைகளும் அருமையாக ரஞ்ஜனி வாசித்தார். தில்லாஞ திருப்புகழை அவர் வாசித்தபோது மீண்டும் மீண்டும் அதைக் கேட்க வேண்டும் போலிருந்தது.

ஆனாலும் யாழ்நகர பிதா திரு எஸ். நாகராசா இவரது வீணை அரங்கேற்றத்தின் போது குறிப்பிட்ட ஒரு குறை எனக்கும் சரியாகவே படுகிறது.

திவ்விய ரஞ்ஜனியின் உருத்திரவீணை கூடுதலாக தெலுங்கு கீர்த்தனங்களையே மீட்டுக்கொண்டிருந்தது. தமிழிலேயே முழுதும் நாதம் எழுப்பப்பட்டிருந்தால் கூடியிருந்த ஜனவெள்ளம் இன்னும் கூடுதலாக ரசிப்புக்குள் மூழ்கியிருக்கும்.

வீணையை இரண்டரை வருடகாலம்தான் ரஞ்ஜனி பயின்றபோதிலும் இப்படியாக அனுபவமுள்ளவர்கள் போல் வாசிக்கிருரென்ருல் அவர் நான்கு வருடம் பயின்று சங்கீதரத்தினம் என்ற பட்டத்தைப்பெறும் போது ஈழத்தில் அவரது வீணையின் இசைக்கு ஒரு தனிப்புகழ் ஏற்படும் என்பதில் சந்தேகமேயில்லை.

இவரது வீணை அரங்கேற்றத்தின்போது யாழ்நகர மண்டபத்தில் திரண்டு வழிந்த ரசிகர் கூட்டம் ஆரம்பத்திலிருந்து முடியும்வரை அமைதியாக இசை வெள்ளத்தில் மூழ்கியிருந்தது. இவரது ஆற்றலைச் சொல்லாமல் சொல்வது போலிருந்தது,

கலைவாணி நிச்சயமாக திவ்விய ரஞ்ஜனியை தன் டக்கம் அணைத்துக் கொள்வாள்,

—ராஜகோபால்

கங்களையும் முதன்முதலாக இங்குள்ள மண்டபத்திலேயே ஆரம்பித்துவைத்தார். வெள்ளிக்கிழமைதோறும் மகோற்சவகாலங்களிலும் நாவலர் பிரான் ஆரம்பித்துவைத்த பிரசங்கம் தொடர்ந்தும் இத்தேவஸ்தானத்தில் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. வெள்ளிக்கிழமைகளில் மூன்று காலங்களிலும் பஜனையும் அம்மன் உற்சவங்களும் நிறைவேறிவருகின்றன.

சமய வளர்ச்சிக்கு முன் மாதிரி காண்பிக்கும் இத்தேவஸ்தானத்தில் வருடந்தோறும் சுவாமி தேவி உற்சவங்களென இரு மகோற்சவங்கள் நடைபெறுகின்றன. தினமும் அதிகாலை 5 மணிக்கு திருவனந்தலும், 8 மணிக்கு கால சுக்தியும், பகல் 12க்கு உச்சிக்காலப் பூசையும் மாலை 5க்கு சாயரக்ஷைப் பூசையும், 6க்கு இரண்டாம் காலப் பூசையும் இரவு 7க்கு அர்த்தஜாமப் பூசையும் நிறைவேறுகின்றன.

நாவலர்பிரான் மாத்திரமன்றி கொழும்புத்துறை மாகாமுனிவர் யோகீஸ்வர சுவாமிகள் தமது "நற்சிந்தனை" என்னும் நூலில் இத்தேவஸ்தானத்தைப் பற்றிப் பல பாடல்கள் பாடியிருக்கின்ருர். இங்கு இன்று தேவி மகோற்சவம் ஆரம்பமாகி இம்மாதம் 18-ம் திகதி நிறைவுறும். தினமும் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாததம்பிரான் சுவாமிகளின் பிரசங்கமும்காலையும் மாலையும் 8 மணிக்குத் திருவிழாவும்நிறைவேறும்

## மேயர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தோனியா சாமிநாதரிடம் இதைத் தெரிவித்த அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா இது விஷயத்தை மாநகர சபையிடம் அறிவிக்குமாறும் அவரிடம் தெரிவித்தார்.

வெளி நோயாளர் சிகிச்சை நிலையம் நிறுவ மொத்தம் சுமார் 200 லட்சம் தேவைப்படுவதாகவும் இப்போதுகைவசம் 600ஆயிரம் ரூபா மட்டும் இருப்பதாகவும், இருப்பினும் முதல் கட்டட வேலைகளை கூடிய கெதியில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை தான் உடனடியாக மேற்கொள்வதாகவும் அமைச்சர் இங்கு உறுதியளித்தார். (கா. நி)

கொண்டாடும் இவ்வேளையில் இவ்வித தகவலும் வெளிவந்துள்ளது. இதுவும் நாட்டின் கல்வி வளர்ச்சியைத்தான் காட்டுகின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஏனெனில் படிக்காவிட்டால் இவர்களெல்லாம் பட்டம் பெற்றிருக்க முடியுமா?

'நான் பன்னிரண்டு குழந்தைகளைப் பெற்றுவிட்டேன்' என்று எந்தத் தாயும் இப்போது மகிழ்ச்சியடைந்துவிடமுடியாது. இது குடும்பக்கட்டுப்பாட்டுக்கு மரியாதை செய்யும் காலம். இதேபோல்தான் நூறு வருடங்கள் நிறைந்துவிட்டால் இது ஒரு சாதனையல்ல. தான் பெற்ற குழந்தை சீராக வளர்வதுதான் தாய்க்குப் பெருமையளிப்பதாக இருக்கும் இதேபோல் இந்த நூறு வருடங்களில் அடைந்த சாதனைதான் நூறு வருடங்களைக் கொண்டிருந்த சாதனையையும்விடப் பெரிய தாகக் கணிக்கப்படும்.

இப்பொழுது கல்வி நூற்ருண்டுவிழா என்று சொன்னுல் அது பலருக்கும் விளங்காது. 'சியவச' என்ருல் தான் அது விளங்குகிறது. இந்த அளவுக்குக் கல்வி அமைச்சர் பிறரைத் தம் வசப்படுத்தியுள்ளார். எதையாவது செயல்படுத்துவதில் கல்வி அமைச்சருக்கு இணை அவர்தான்.

முன்னைநாள் பிரெஞ்சு அதிபர் டிகால் மாதிரி உடலமைப்பும், முக அமைப்பும் (குறிப்பாக மூக்கு) கொண்டிருப்பதாலோ என்னவோ எதையும் தாங்கக்கூடிய தைரியமுடையவர் அவர்.

கல்வி அமைச்சர் சமாளித்துவரும் பல பிரச்னைகளில் இப்போது மகளும் சேர்ந்துள்ளார். காலியைப் பிறப்பிடமாகக் கொண்ட அமைச்சருக்குத்தான் பாரதத்தைப் பிடிக்காது. ஆனல் கல்வி அமைச்சர் இரியகொல்லைக்கு பாரதத்தை நிரம்பவும் பிடிக்கும்போல் தெரிகிறது. இல்லாவிட்டால் தமது மகள் அங்கு செல்வதற்கு அவர் தம் மகளுக்குச் சம்மதம் கொடுத்திருப்பாரா? இப்பொழுது மகளுக்கும் சுகமில்லை. பாசம் யாரை விட்டது. கல்வி அமைச்சர் அங்கு சென்று மகளைக் கூட்டிவரப்போகின்ருராம்.

இந்த ஒரு மகளுடனேயே இந்தப் பாடுபடும் கல்வி அமைச்சர் பல பெற்ருேர்கள் தமது பல பிள்ளைகளுடன் படும்பாட்டை உணராமலிருக்கமாட்டார்.

இலவச என்ற சொல்லை அடியொற்றி இப்பொழுதும் கல்வி இலவசமாக வழங்கப்படுவதாகக் கேள்விப்படுள்ளதுபோல் தோன்றுகின்றது மாணவர்கள் சிலர் ஆசிரியருக்குத் தெரியாமல் தலைமறைவாகத் திரிவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கிறதாம். இதனுல் ஆசிரியர்கள் தமது சம்பளத்தில் 'சியவச' சீட்டிழுப்புக்கான பணத்தை செலுத்திவிட்டு டிக்கட்டுகளைத் தாமே எடுத்துவைத்துப் பாதுகாக்கிருர்கள் என்பது சில வட்டாரச் செய்தி. இத்தகைய ஆசிரியர்கள் வீட்டில் சயபளம் எங்கே என்று மனைவிமார் கேட்கும்பொழுது (திருமணமானவர்களைத் தான் குறிப்பிடுகின்ருேம்) 'சியவச' என்று சுருக்கமாகப் பதிலளிக்கிருர்களாம்.

'சியவச'வுக்கு இதைவிடப் பிரசாரம் வேறு வேண்டுமா?

மகளின் விஷயத்துக்குப் பின் அமைச்சர் இரியகொல்லை சற்று மனம் இளகியிருக்கிருர். பத்திரிகையாளருக்குச் 'சமாதானமாக வாழ்வோம் வாருங்கள்' என்ருேர் அழைப்பு விடுத்திருக்கிருர் திரு. இரியகொல்லை என்கிறது கடைசியாகக் கிடைத்த செய்தி.

பிடிவாதம் தளரும்போது அங்கு வருவது சமாதானம் தானே.

கல்வித்துறையிலும் இவ்வித சமாதானம் இந்த 'நூற்ருண்டுக்குப் பிறகாவது ஏற்படுமா?

—குருவி.



## புதிய வழக்கறிஞர்

வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த பொன்னையா சத்தியசீலன் உயர் நீதிமன்ற வழக்கறிஞராக நீதியரசர் எஸ். ஆர். விஜயதிலகாவின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவராவர். தமிழார்வமும்' கலாபிமானமும் மிக்க இப்புதிய வழக்கறிஞர் சட்டக் கல்லூரியின் தமிழ் மன்ற வளர்ச்சிக்கு உறுதுணையாகப் பணியாற்றியிருக்கின்ருர்.

# 'யாழ்ப்பாணத்தில்பல்கலைக்கழகம் அமைவதை எல்லாக்கட்சிகளும் ஏற்றுக்கொண்டன'

— உடுப்பிட்டி எம். பி.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது உடுப்பிட்டி தொகுதி எம். பி. திரு. சிவசிதம்பரம் நிகழ்த்திய உரையின் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

பல லட்சக்கணக்கில் பெறுமதியான தர்மச்சொத்துக்களை சர். பொன்னம்பலம் ராமநாதனும், ஆறுமுக நாவலரும் விட்டுச்சென்றுள்ளார்கள்.

திரு. தர்மலிங்கம்: அந்த சொத்துக்கள் எவை?

திரு. எம். சிவசிதம்பரம்: என்னிடம் நீர் வந்தால் அந்த சொத்துகள் எவையென்று சொல்கிறேன்.

உடுவில் அங்கத்தவர் (திரு. தர்மலிங்கம்) கூட ஏராளமான சொத்துக்களுக்குவாரிசாவார். அதுபற்றி எனக்கு சந்தேகம்கிடையாது ஆனல் சர். பொன்னம்பலம் ராமநாதனும் ஏராளம் சொத்துக்களை விட்டுச் சென்றுள்ளார்.

சபாநாயகர்: அதைத்தான் அவர் அறிந்துகொள்ள விரும்புகிருர் அவருக்குச் சேரவேண்டிய சொத்துகள் எவை?

திரு. சிவசிதம்பரம்: நான் சொன்னதுபோல் நிறைய சொத்துகள் உள்ளன. யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்காக அவற்றைப்பயன் படுத்தலாம் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவும் கொள்கையை இந்நாட்டின் எல்லா அரசியல் கட்சிகளுமே ஏற்றுக்கொண்டுள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிஇதை ஏற்றுக்கொண்டது. சமசமாஜக்கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் இதை ஏற்றுக் கொண்டன. இந்த அரசாங்கமும் ஆட்சிக்கு வந்ததிலிருந்து தொடர்ந்த நான்கு பட்ஜட்களிலும் அடையாள மானியம் ஒதுக்கியதன் மூலமாக இதை ஏற்றுக்கொண்டுள்ளது.

இதற்குமேல் அதிக நேரமெடுக்க நான் விரும்பவில்லை. ஆனல் இதைமட்டும் நான்சொல்லவிரும்புகிறேன் கொழும்பு மத்தியதொகுதி மூன்ருவது எம். பி. (திரு. பீட்டர் கெனமன்) ஐக்கியம் பற்றிப்பேசும்பொழுது, பிரதமர் இடைமறித்து, சமஷ்டிக்கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேறியபின்பும் கூட இந்தநாட்டில் ஐக்கியம் நிலவுகின்றது என்று கூறினுர். பிரதமருடைய கட்சியும், இந்நாட்டின் மற்றைய எல்லா கட்சிகளும் தமிழ் மக்களை சமஷ்டிக்கட்சியுடன் சேர்த்துப்பார்ப்பதை இப்பொழுது நிறுத்திவிட்டன என்பதுதான் இதன் அர்த்தமானுல், அது இந்தநாட்டின் அரசியலில் வரவேற்கப்பட வேண்டியதோர் முன்னேற்றமாகுமென்றே நான் கருதுகிறேன். இதை நான் சொல்லவே ஆசைப்படுகிறேன்; இங்கேயே இதைச் சொல்கிறேன். சமஷ்டிக் கட்சியினர் அவர்களதுசொந்தக் கொள்கைகளைக் கொண்டிருக்கலாம். அவர்களது கொள்கைகளே அவர்களை இந்தநிலைக்குக் கொண்டு வந்து "இந்த நாட்டிலும், இந்தச்சபையிலும் நாம்தனிமைப்பட்டு நிற்கிருேம்' என்று அவர்களே ஒப்புக்கொள்ள வேண்டியநிலைக்கு ஆளாக்கியிருக்கலாம். ஆனல் தமிழ் மக்கள் சமஷ்டிக்கட்சிக்கு மாருனவர்கள், சமஷ்டிக்கட்சியிலிருந்து வேறுபட்டு நிற்பவர்கள் சமஷ்டிக் கட்சியின் அபிலாஷைகளிலிருந்து வேறுபட்ட உரிமைகள் அவர்களுக்குண்டு, அவை பாதுகாக்கப்பட வேண்டும். என்பதை இந்நாட்டிலுள்ள அரசியல்கட்சிகளும், அரசியல் தலைவர்களும் சிந்திக்கத் தலைப்பட்டுவிட்டார்களென்ருல், அதனுல் சிறுபான்மையோரின் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதில் நாம் ஒரு படி முன்னேறிவிட்டோம் என்றே நான் கருதுகிறேன்.

(முற்றும்)

## வள்ளுவர் விழா

சுழிபுரம், செவ்வாய்

பொன்னலை அறிவு வளர்ச்சிக்கழகத்தினர் வள்ளுவர் ஈராயிரம் ஆண்டு நிறைவு விழாவை வரும் வெள்ளிக்கிழமை கொண்டாடவிருக்கின்றனர். கழக மாணவர்களின் விவாதஅரங்கு கலை நிகழ்ச்சிகள் சொற்பொழிவுகள் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## புதிய நிர்வாகிகள்

உருத்திரபும், செவ்.

உருத்திரபுரம் சிவநகர் பயிர்ச் செய்கைக் குழுவின் புதுவருட நிர்வாகிகளின் தெரிவு சிவநகர் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் திரு. உ. சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. பின் வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர்-சிவகந்தையா காரியதரிசி-ச. தம்பிராசா தனதிகாரி. சவிநாயகமூர்த்தி இன்னும் அங்கத்தவர்களாக ஒன்பதுபேர் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org